சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சென்னிமலைத் தலபுராணம்

இஃது

பண்ணைவிராத முனிவர் திருவாய் மலர்ந்தருளியதை

சென்னிமலை

வா. ந. மா. சி. கருப்பண்ண முதலியாரவர்களால்

பரிசோதிக்கப் பெற்று

சென்னிமலை

பரிபாலன சபையின் திரவிய சகாயத்தைக் கொண்டு

கோயமுத்தூர்

சி. கு. நாராயணசாமி முதலியாரவர்களால்

பதிப்பிக்கப் பெற்றது.

1923

முன்னுரை.

குன்றுதோறாடல் செய்யும் குமரவேள் கோ... கொண்டருளும் குன்றுகள் பலவற்றுள்ளும் "சிரகிரி" யென்னும் சென்னிமலை சிறந்த தலமென்பர் ஆன்றோர்: இது தன்னுள் சிறந்த மூர்த்திகளையும், அரிய தலங்களையும், புனித தீர்த்தங்களையும் உடையனவாயப் பின்னும் பல விம்பிதங்களையும் மேற்கொண்டு விளங்கும் பெருமை வாய்ந்தது. இதன்றிப் பண்ணைமதிசிறந்து பல சந்தங்களும் விரவி, அரியகருத்துக்களமைந்து வெற்றிவேற் கடவுளின் வீறுகளை விருப்பமுடன் விளக்கும் ஸ்ரீ அருணகிரிப் புலவரின் திருப்புகழையும் பெற்றதென்றால், இத்தலப் பெருமையை அளவிடற்பாலதோ! இத்தகைய திருத்தலத்திற்கு ஆதி சைவமரபில் தோன்றி அரும்புலமைவாய்ந்த "சரவணவிரத முனிவர்" என்னும் பெரியார் வடமொழியினின்றும் தென்மொழிப் பெயர்ப்பாகச் செய்யுள் வடிவிற் செய்த "சென்னிமலைப் புராணம்" ஒன்றிருப்பதாக வுணர்ந்து அதனைத் தேடிப்பெற்றுக் காதலுடன் ஓதிவந்தேன்; அதில் ஏடெழுதுவோரானோ, எடுத்துச் சொல்லுவோரானோ, ஆங்காங்குச் சில பிழைகள் காணப்பட்டன. சிலவிடத்தில் தொடர்ச்சிவிட்டும் சிதலவாய்ப்பட்டும் ஜீர்ணமடைந்திருந்தன. இக்குற்றங்களைத் திருத்திச் சிதைந்தவற்றைச் சீர்படுத்திப் புதுவது புனைந்து புராணத்தை உருவாக்கினால், அதில் அமைந்து கிடக்கும் விஷயப்பெருமையும், தலச்சிறப்பும், மற்றும் பல அரியவிஷயங்களும் தமிழபிமானிகட்கும் சிவநேசச்செல்வர்கட்கும் பெரிதும் பயன்படக்கூடு மெனக்கருதி, அவ்வகையில் ஈடுபட்டு என் அறிவு ஆற்றல்களுக்கு இயன்றபடி ஒருவாறு மேற்கூறிய குற்றங்களைந்தும் புதுச்செய்யுட்கள் புனைந்தும், சிலவற்றிற்குக் குறிப்புரை வரைந்தும் முற்றுப்பெறச்

செய்தேன். இவற்றில எனது அறிவு மிகச சிரமமுற்றது. இங்ஙனம் நான் சிரமங் கொண்டது கதிர்வே லனையல்பாற்கொண்ட அன்பின்காதலும், தமிழபிமானமும், அததலததுப்பிறந்த காரண முமேயன்றி என்பெயர் சிறக்கவேண்டுமென்ற பெருமையைக் கருதி யன்று.

இங்ஙனம் முயன்று முடிதத இபபுராணததை விரைவில் அச சிட்டு வெளியாக்க வெகுவாகப பிரயததினபபட்டும் இயலாது இறுதியாக,இவவூர்ப் பிரபல பஞ்சுவா ததகர் ஸ்ரீமான K. கிருஷ்ண முதலியாரவர்க ளிடததுக்கூறினேன். தமிழறிவும், சமயாபிமான மும், சிவநேசமுமிக்க அவர்கள ஆலோசிபபதாகக் கூறித் தமது நண்பாகளாகிய ஸ்ரீமான் வா. சா. அருணசல முதலியாரவர்களு டனும். ஸ்ரீமான குருமூர்த்தி செட்டியாரவாகளுடனும் கலந்து யோசிததனர். ஜீர்ணோததாரணம் செயவதும், பிரபந்தம் இயற்று விப்பதும் சிவபுராணததை அசசிடுவதுமாகிய செயலகள புண் ணிய காரியஙகளென்பதை யுணர்ந்த அவர்கள செட்டி முதலியா ரவர்கள விருப்பத்திற்கிணஙகிப் புராணததைப் பொதுவில முததல "தர்மபரிபாலன சபையின்" ஆதரவில வெளியிடுவது ந்தமெனச சொலலி அதறகுரிய செலவுக்குப் பண உதவியும் சய்தனர். அப்பரோபகாரிகளின் பெருந்தன்மையும் உபகாரச செயலும் மிகவும பாராட்டததககன.

இப்புராணம் முழுதும் செய்யுள ரூபமாயிருப்பதில் கற்றோர்க் கன்றி மற்றையோாககுப பொருள விளஙகுவது சற்று சிரமமா யிருக்குமென்றெண்ணி, ஒவவொருமான்மியம், அல்லது சருக்கங் களுக்குச சுருக்கமாக வசனம் எழுதியும், ஆசிரியர் வரலாறு விளக்கியும், தலம் தீர்த்தம் முதலியவைகள இன்னின்னவிடத்தி லிருக்கிற தென்பதைத தெளிவுபெற காட்டியும், விவரிக்க

எண்ணியிருந்தும் சில காரணங்களால் முடியாமற் போயிற்று. அறிஞர்கள் மன்னிப்பாராக. மேற்குறித்தவைகளின் விவரங்களைச் "செப்பேடு கண்டமான்மியம்" "தலமான்மியம்" "தீர்த்தமான்மியம்" ஆகியவைகளிற் கண்டு தெளிவாராக.

இப்புத்தகத்தை அச்சிடுவதில் எனக்கோர் சிரமமின்றி எல்லாச் சிரமத்தையும் தம்முடையதாகக்கொண்டு சென்னையில் தாம் நடாத்தி வந்த அலுவல்களுடன் இதனையும் ஒன்றாகக்கொண்டு நன்றாக அச்சிட்டுதவிய எனது நண்பரும், பல தமிழ் ... எழுதி வெளியிட்டவருமாகிய ம-ா-ா-ஸ்ரீ சி. கு. நா. ... முதலியாரவர்கட்கும், இப்புராணம் வெளிவருவதற்கு நல்லுபகாரியாயிருந்த ஸ்ரீமான் K. கிருஷ்ணமுதலியாரவர்கட்கும், அச்சிட்டப் பொருளுதவி புரிந்த தர்மபரிபாலன சபையார்களுக்கும், எனது அன்பார்ந்த நன்றியறிதலுள்ள வந்தனம் என்றும் உரியதாகும். இதில் ஏதேனும் குற்றமிருப்பின் மன்னித்துக் குணங்கண்டு மகிழ்வாராக. சுபம்.

சென்னிமலை
14-11-23

தங்கள் அன்பின் ஊழியன்
ந. மா. சி. கருப்பண்ணன்.

அட்டவணை.

		பாட்டு.	பக்கம்.
1	காப்பு முதலிய [illegible]	36	1
2	செப்பேடு கண்ட மான்மியம்	27	11
3	வான் சிறை [illegible]	28	15
4	திருநகரச் சருக்கம்	10	19
5	கமலாலய பத்திச் சருக்கம்	11	20
6	நகரச் சிறப்புச் சருக்கம்	22	24
	[illegible] சருக்கம்	8	27
8	சென்னிமலைக்கு [illegible] சருக்கம்	13	28
9	[illegible] மான்மியம்.	9	30
10	திருவிளக்கு [illegible]	10	32
11	[illegible] சமய [illegible] மான்மியம்	15	33
12	[illegible] சம்மார மான்மியம்	23	41
13	[illegible] மான்மியம்	33	45
14	மயூரதாண்டவ மான்மியம்	30	57
15	மார்க்கண்டேச்சுர மான்மியம்	85	61
16	புட்பகிரி மான்மியம்	13	76
17	[illegible] வழிகாட்டிய மான்மியம்	33	85
18	தீர்த்த மான்மியம்	52	90
19	வள்ளியம்மன் சந்நிதி மான்மியம்	26	100
20	முருகக் [illegible] மான்மியம்	53	105
21	முத்துக்குமாரன் மான்மியம்	18	115
22	காட்சி மான்மியம்	22	125
23	ஆலயங்கண்ட மான்மியம்	27	131

ஆக மான்மியம் 23-க்கு திருவிருத்தம் 667

உ

ஸ்ரீ வேலுமயிலுந் துணை.

சென்னிமலைத்தல புராணம்.

ஆதி விநாயகர் காப்பு.

நிலைமண்டில ஆசிரியப்பா.

நன்னூல் முன்னூல் நற்பா நாற்பா
தொன்னூ லெல்லாந் தூக்கிற் றூக்கி
மனனு வின்னி யீடாய்ப் பாடும்
முன்னு மூன்று கண்ணு காப்பு. 1

மலைவிநாயகர் துதி.

நிலைமண்டில ஆசிரியப்பா.

அரனரி யயனிலை வருகுமு னவனெவன்
சரவண பவகுக சரசமு னவனெவன்
சிரகிரி வளமுறை தெரியுமு னவனெவன்
இரவிம தகரிவ தனனடி யிறைஞ்சுவாம். 2

டஞ்சகூவிள மா விநாயகர் துதி.

சொலலுஞ் செநதி மலைமகன் தோன்றிய
மல்லல் சென்னி மலைச்சி ரியமயிட
வலலி பொன்னி மலைததலை யானைசீர்
வல்லன் பொன்னிம லன்பதம் வாழ்த்துவாம. 3

ந-என்னுமெழுத்து முதலில் வந்த காரணம் மங்கலப் பொருத்தமாகும். இதற்கு மேற்கோள் காரிகையில், பொருத்த-வினுவிடை. மா-மணி-தேர்-புகழ்-அமுதம்-எழுத்து-கங்கை-பதி பருதி-களிறு-பரி-உலகம்-சீர்-நாள் - பூ-மலை-கார்-திரு-கடல்-நீர்-பழனம்-பார்-சொல் - பொன் - திகிரி. (பிறவுமென்றதனுல்) அநந்ததி-ஞண்டு - ஆரு - கடவுள் - சங்கு - தார்-விசும்பு-கவி-கயல்-முரசு-கவரி-தோகை-இவையுமா மென்றவாறு,

எழுத்து-என்ற மங்கலத்தில், அவ்வெழுத்து வருமாறு.— க, ச, த, ந, ப, ம, வ, அ, இ, உ, எ, இப்பன்னொன்றும் அமுத வெழுத்துக்களாம். ஆகையால், ந, என்னும் எழுத்து மங்கலமாம். இரண்டாம்பாவில், அரியரனென்னுங் கடவுள் மங்கலமாம. மூன்றாம்பாவில், சொல்லென்னு மங்கலமாம். எழுத்தெண்ணிய பொருத்தம் எட்டு, ஆறு, நான்கு, இரண்டு. தானப்பொருத்தம் குமரன். பால் பொருத்தம் ஆண். இதனால், எல்லோருமே மங்கலமே முதலாகச் சகல நூல்களையும் கூறுவர். ஈண்டு புராணிகர்-நன்னூலென்றெடுத்தார். (ஓசை வண்ணம் சந்தம் ஒரு சொற் கிழவி)

சீரானும், அடியானும், தொடையானும், பெயர் வேறுபாடுணர்த்துவர். அவையாவன.—நேர் நேர் இயற்றளை ஏந்திசை அகவலோசை, நிரை நிரை இயற்றளை தூங்கிசை அகவலோசை, இருதளை யொன்றுவது, ஒழுகிசை, அகவலோசை என (3) கலித்தளையியையின், ஏந்திசைத்துள்ளலோசை.

வெண்றளை, தன்றளையியையின், அகவற்றுள்ளலோசை என (3) தன்றளை பிறதளை யியையின்-பிரிந்திசைத் துள்ளலோசை-ஏந்திசைத் தூங்கல்-அகவற்றூங்கல் பிரிந்திசைத்தூங்கல் என (3) என்னை? ஒன்றிய வஞ்சித்தளையே வரினும், ஒன்றா வஞ்சித்தளையே வரினும், மென்றிவை யிரண்டும், பிறவு மயங்கினும் ஏந்தலகவல் பிரிந்திசைத்தூங்கலென், றமைந்த நிரநிறை யாகுமென்ப. செய்யுட்கேடாறும், ஓசையைக்காண்பிக்க விரியும். ஆகையால், சீர்-அடி-இவைகள் குறிக்கப்பட்டது - (அடிகள்) - கூ - இரண்டு முதலாயெட்டீறாகத்-திரண்ட சீரானடிமுடிவுடைய - விறந்து வரினு மடிமுடிவுடைய-சிறந்தவல்ல செய்யுளுள்ளே, (அடியொன்றுக்கு எழுத்து.)

இயைபிலக்கண மியைந்ததாகும். செய்யுளுடையார்-நாற்சீரடி தன்னையே-நான்கெழுத்து முதலா, வாறெழுத்து வரையும், குறளடியென்றும், ஏழெழுத்து முதலா-ஒன்பதெழுத்து வரையும் சிந்தடியென்றும், பத்தெழுத்து முதலா-பதினான்கெழுத்து வரையும் அளவடி யென்றும், பதினைந்தெழுத்து முதல் - பதினேழெழுத்து வரையும் நெடிலடியென்றும், பதினெட்டெழுத்து முதலா,

இருபதெழுத்து வரையும் கழிநெடிலடி யென்றும், இருபதெழுத்தின் மிக்க நாற்சீரடிப்பா இல்லையென்றும், வேண்டுவர் அவ்வடிக ளெழுத்துக்கள், அகவலோசை யான் வந்தா லளவினிற்கும், துள்ளற்றுங்கலோசைக்கி மிக்கவரப்பெறும. அவ்வோசைகளைச் சந்த மென்றும், வேறுமென்றும், பாக்களிற்குறிக்கப்படும். அவ்வெழுத்தெண்ணுமின்றுழி, வெண்பா.

அருநேணுக்கு நீரா ரசைச் சீரடிக்கட்
பொருநேணுக்க தோசைபே நோக்கி - மருணீக்கிக்
கூம்பவும் கூம்பா தலரவும் கொண்டியற்றல்
வாய்ந்த வகையுளியின் மாண்பு.

(மேற்குறித்த வெண்பாவின்) 3-வது அடியில் (கூம்பவும்) என்று, 4-வது அடியில் (வாய்ந்த) என்றும் வந்ததற்குக் காரணம் (சூத்திரம்) ய ற ல ழ வென்னு மீரிரண்டொற்றும், வான்முறை பிறழாது வந்திடை யுயிர் ஙஞ்ணநமன வென்னுமா றொற்றும் வேண்டும் அல்லது ஓராசிடை மெல்லின வெதுகை யாசிரிய வெண்பா வென்பார்கள்.

சத்திவிநாயகர் துதி.

வேறு.

சாற்றுமலை யாசலத்து யா முனியைத் தண்டமிழாற்
தேற்றுமலை யானுகந்த சென்னிமலைச் சீர்கவிற்ற
தோற்றுமலை மானருளுஞ் சோதிவிழி யானைமுக
வாற்றமலை நாயகன்ப தாம்புயத்தை யாம்பணிவாம். 1

தேகஷணமூர்த்தி துதி.

சந்தக்கலி நிலைத்துறை.

ஆடரவக் குழைச்செவி புமம்புலிசா னவியணிந்த அந்திவண்ண
நீடுசடைத் தலைக்கிசைந்த நிலவுவொளி நீறுநுத னிரைந்தமுக்க
ணேடரவஞ் சிவமாலை யெரிமழுவு மேந்தியா லடியினின்று
சேடரொரு நால்வருக்குந் தெளியமனு வூட்டுவன்றாட் சென்னி வைப்பாம். 2

நடராஜர் துதி.

அறுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சொல்வந்த சதுர்வேத னுவந்துவந்த னைகூறச் சுரர்வந் தேற்ற
வெல்வந்த தவமுனிவ ரிருபுடையும் விழிபொழிநீர் மாரி பெய்ய
வல்வந்த முலையுமையாள் வரிநெடுங்க ணருள்கொளிப்ப மன்று
ளாடும்—வில்வந்த ணிதழிபுனை விமலனிரு கமலபதம் விருப்பஞ்
செய்வாம். 3

சிவகாமி துதி.

வேறு.

கானவேடுவர் மானிருந்திடங் கண்டுகண்களி கூர்ந்தவேலவர்
தானமாகிய சென்னியங்கிரி தன்வளந்தமி ழான்மொழிந்திட
தேனுகர்ந்திடு வண்டுசேல்கணை நிகழ்வினன்னுத லேர்நிறை
ஞானசுந்தர நாயகிசிவ காமிதாழிணை வாழ்த்துவாம. 4

இமையவல்லி மார்க்கண்டேசர் துதி

அறுசீர்கழி நெடிலடிலாசிரிய விருத்தம்.

சேற்கண்டே மலரோதிச சிறுமதிவா ணுதலிலவி னிதழ்வாய்ச
செந்தேன் —பாற்கண்டே யனையபணி மொழியிடைய வல்லியொரு
பாக மாக—மேற்கண்டே சுரர்போற்ற விளங்கிவளர் சிகரகிரி
மீதின் மேவு—மார்க்கண்டே சுரர்வாச மலரடிமா மலர்தூவி
வணக்கஞ் செய்வாம் 5

விஷ்ணு துதி.

வேறு.

கன்னிதலைச் சூடுங் கடவுளடி காணு
வன்னிமலை தேடி வளம்பொருந்தையார்வோன்
மன்னுமலை மார்க்கண் டேசனடி கண்ட
சென்னிமலைக் கண்ணன் றிருவடியைச் சேர்வாம். 6

ஆறுமுகக்கடவுள் துதி.

அறுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்.

திருமுடிக ளிருமூன்று மூவிரண்டு திருமுகமுந் திகழ்நா மூன்று
திருவிழியு முன்னான் குந் திருமகர குண்டலமுந் திருநான் மூன்று
திருமணிவா குவுந்திருக்கை முன்னான்கு சிரகிரிச்சேசப் திரிநூன்
மார்புந்—திருவடியு நூபுரமுந் திருக்கரவேல் துதித்துமனத்
திருத்தி வாழ்வாம 7

தண்டபாணி துதி.

வேறு.

சோணாட்டுள கிரிகளெலாஞ் சென்னியங் கிரிபா
னாரியொடு வர்க்குநா யகியொடுசெந் நிமலைக்கு
மாரர் வீரர்க்கா முசுமுகச் சென்னியன் வணங்குந்
தீரதண்ட பாணியன் மலரடி சென்னிவைப்பாம். 8

தேவயானை வள்ளிப்பிராட்டியார் துதி.

சந்தக்கலி நிலைத்துறை.

நறைக்கோலப் பரங்கிரியிற் சிரகிரிச்செவ் வேள்புணர்ந்த நாமவேற்
கண்—குறைக்கோல வெண்மதிவா ணுதற்றேவ குஞ்சரிதாள்
குறிந்துவாழ்த்தி—மறைக்கோலக் கிழவு நவாப் பணிந்துகந்தன்
வினோதமண மகிழ்ந்துமேவுங்—கறைக்கோல வயினெடுங்கட்
குறக்கோல மடநதைபதங் கருதிவாழ்வாம. 9

சத்தியஞானி துதி.

அறுசீர்கழிநெடி லாசிரிய விருத்தம்.

போழ்தலவெண் பிறசடையு நுதற்கிசைந்த கனிவிழியும் புணரி
யின்ற —காழ்வடமு மிடறிலணிந் துகந்துதே சிகவடிவாய்க்
கவினத் தோன்றி—யேழ்பவவே லையைமலர்த்தா ளிணையினாற்
கரையேற்றி யெனையாட் கொண்ட—வாழ்வுதருஞ் சத்தியஞா
னியையிதைய மலர்த்தவிசில் வழுத்தல் செய்வாம். 10

தானுகெழுந்த தம்பிராட்டி துதி.

சந்தக்கலி விருத்தம்.

கயத்தோலை மெய்ப்போர்த்த கயிலைய னடியிலயி
நயத்தாரி பிருங்கிமுனி நாதனுல் நாதனிடப்
புயத்தோடு கூடெழுந்த பூவையெம்பி ராட்டிசர
ணயத்தோடும் பயத்தோடும் நாடோறுந் துதிசெயாமால்.

திருவிருந்தாபுரந் திருச்சந்திவிநாயகர் துதி.

அறுசீரகழிநெடிலாசிரிய விருத்தம்.

உருச்சந்தி யாக்கைநரம் பிறைச்சிமச்சை மூளைமல முதுநீர் கோயக்
கருச்சந்தி யாதுதொண்டர்க் கருள்புரிவோ னருளிபசெய் கழுநீர்
வாவி—தருச்சந்தி யாவுவளங் கெழுசெழுநீட் சிரகிரிச்சார் தயங்கி
வாழுந்—திருச்சந்தி விநாயகன்சே வடிபோற்றி யிடையூறு தீர்து
மன்றே. 1

திருமுகமலர்ந்தநாதர் துதி.

மெய்யிலணி நீற்றினொளி விளங்குநிலாத் துண்டநதி மிளிர்செவ்
வேணி—யையனைபே ஐங்குருவா யாராறு தத்துவங்க ளாயினனை
ணைதையலொரு பாற்றவசு வீற்றிருப்ப வருளபுரியுங் கலைவன் றன்னை
செய்யதிரு முகமலர்ந்த தேவையடி போற்றிவினை தீர்து மன்றே. 2

திருந்தார்குழலி யம்மன் றுதி.

முருந்தார்வெண் ணகையாளை முகிராமென் முலையாளை முழுநீர்
நீலக்—கருந்தாரை விழியிலநள் பொழிந்தாளைத் தனிநுதற்கட்
டலைவர் பால்வீற்—றிருந்தாளை யுலகமெலா மீன்றாளை யின்றபடி
யறமெண் ணான்கும்—வருந்தாது புரிதிருந்தார் குழலுமையை
மலர்தூவி வணக்கஞ் செய்வாம். 3

திருக்கை வேலாயுதர் துதி.

சென்னிமுக மோராறு திருவிழிகா றீராறு திகழ்கை வாகு
புண்ணிரண்டு பண்டிமார் பொன்றிரண்டு பதுமபத மிரண்டு பாலுங்

கன்னியர்க ளொடுநடன கலாமிசை கயிலையிருந் தனையோடுவந்த தென்னையடர் திருவிருந்தா புரதிருக்கை வேலவனை சிந்தை சேர்ப்பாம். 4

திருக்கை நாராயணப் பெருமாள் துதி.

திகிரிசங்கந் தண்டபாபஞ் சிறந்தகர மொருநான்குந் திருமால் ரண்டு சுகவிருந்தம புயதகியங்க சோமணிடை துவளவுத் தரிக மின்னப் பகலவன்ற னொளிபரப்பும் பலமணிபொன் குண்டலமு மௌலி சூடிச்—செகமளந்த கார்வண்ணத் திருக்கைநாராயணனைச் சிந்தை வைப்பாம். 5

கமலாலய விநாயகர் துதி.

கலிவிருத்தம்.

புவியினீள் கொங்கின் பூந்துறை நாடதில்
சிவையாள் மன்ற செருக்காளி யம்பதி
தவன மோங்கு தடக்கமலாலயத்
தவள வானை சரண்முடி சாற்றுவாம். 1

மூலத்தானர் துதி.

மூன்றி லொன்றின் முளைத்தாறு மாரினின்
மூன்றி ரண்டு முகமோ ருடலனை
மூன்றி லொன்றின் மொழிய வளங்கரி
மூன்று மொன்றான மூர்த்தம் வணங்குவாம். 2

கைலாயநாதர் துதி.

அறுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்.

குயிலாய முழவுவிம்மக் கோங்கலர்வா னகந்தாளங் கொட்டப் பைந்தே—னயிலாய ஞிமிறுபா ணிசைமிழற்றப் பொதும்பர்தலை யசைப்பத் தோகை—மயிலாய நடம்புரியுஞ் சிரகிரிச்சா ரலின்வைகு மணிப்பொற் கோயிற்—கயிலாய நாதனிரு கனகழற்-பொற் சேவடியைக் கருத்துள் வைப்பாம். 3

பெரியநாயகியம்மன் றுதி.

எண்சீர்கழிநெடி லாசிரிய விருத்தம்.

வான நாயகி தவள வனச நாயகி பதும மலர்ப் பொற்
கோயிற்-றான நாயகி போற்றுஞ் சரண நாயகி கயிலைத் தலைவர்
பாகத்-தான நாயகி யறிவு தொழிலா யப்பா லுக்கப் பால்
நின்ற ஞான நாயகி பெரிய நாயகி சீரடி யிணைய கனிணஞ் சேர்ப்பாம் 4

பஞ்சமூர்த்த துதி.

கலிநிலைத்துறை.

அஞ்சிலே வொன்றைக் கிள்ளி னான்கரத் தறிய வல்லார்
அஞ்சிலே வொன்று சேர்த்தா னவுணர்கோ னஞ்சுக் கஞ்சான்
அஞ்சிலே வொன்று பள்ளி யாரிய ரறைவ ரொன்றே
அஞ்சுமாய் நின்ற மூர்த்த வமலரை வணக்கஞ் செய்வாம். 5

குமாரர் துதி.

அறுசீர்கழி நெடிலாசிரியச் சந்தவிருத்தம்.

ஒருதலைச்சீர் மணிமகுடம் பலதங் குபுங் காட்டிபொளி யோங்கி
யன்ப—ரிருதலைச் சூற் குலிசமணி யிலகுவர தபயகர நான்கு
வாகின்—மருதலைச்சி குறமகளு மிருபுடையும் வயங்கமயி லேறிக்
கோட்—நிரைதலைச்சேய் குமரனிரு சரணமலர் முடியணிந்து
நிகழ்த்து வாம்யாம 6

விஷ்ணு துதி.

சந்தக்கலி விருத்தம்.

வாரணங்கை வைத்தமரின் வாயினும்வைத் தூதுவனின்
மாரணங்கை வைத்தணியார் மாரனைய ளித்துமணி
வாரணங்கை வைத்தளித்து மலர்க்கோட்ட மேற்கெழுந்த
வாரணங்கை யந்தணிட மலர்த்தாளை வாழ்த்து மால். 7

நந்தீசர், நவவீரர், நால்வர், திருத்தொண்டர்கள் துதி.

எண்சீர்கழிநெடிலாசிரிய விருத்தம்.

காவனந்தி யடிபோற்றி லக்கத் தொன்பாங்
கணங்களா வியவீரர் கழல்கள் போற்றி

மேவுகவு ணியர்பிரா னடிகள் போற்றி
வேலையிற்கன் மேன்மிதந்தோன் விரைதாள் போற்றி
நாவலவ னடிபோற்றி வாத வூரார்
நளினமலர்ப் பதம்போற்றி நம்பர் செம்பொற்
சேவடிதாழ்ந் துயர்தண்டி முதலா மேன்மைத்
திருத்தொண்டத் தொகையினர்தாள் போற்றி போற்றி. 8

வேல்-மயில்-கோடி-வேதியர் முதல் மற்ற வடியவர் துதி.

சென்னிமலைச் சேவகன்பொற் றிருக்கை வேலுஞ்
சிகண்டியுங் குக்குடக்கொடியுந் திறலும் போற்றி
சென்னிமலைச் சேய்பதம் வந்தனைக ளாற்றுஞ்
சிவவிரதச் சைவவே தியர்தாள் போற்றி
சென்னிமலைச் செவ்வேள்சீ ரருள்பெற் றோருந்
தெளிதரு சிந்தையினர் திருத்தாள் போற்றி
சென்னிமலைச் சினகரங் கூற்றேவ லாற்றுந
திகழுமகம் படிமையர்தாள் போற்றி போற்றி. 9

இடும்பன் றுதி.

கலிவிருத்தம்.

கடம்ப மலையணி காங்க யன்கணி
லடர்ந்து காலி லழுந்தி யருட்பெற்ற
தடம்புயன் சென்னித் தாணு வடியின்வா
ழிடும்பே சனைக்கண் டெப்போது மேற்றுவாம். 10

அரிஹரபுத்திரன் றுதி.

சத்தி யெழுமாதர் தங்கும் பிராட்டியூர்
வெத்தி கொண்ட விறற்காளி யம்பதி
மத்தி யாரு மரியர மைந்தனீண்
முத்தை யனைமு றையொடு போற்றுவாம்.

கலிநிலைத்துறை.

ஆறுமே கருத்திலெண்ணி யஞ்சையு மொன்று சேர்த்தி
ஆறுநாட் குள்ளேயஞ்சி லந்தியி லெழுவான் பெய்ய

ஆறுமே லுறவிநிற்க வஞ்சுமோ வங்க மம்மான்
ஆறுநா லெட்டைத்தந் தான்றைந்திட வறைந்தன் மன்னே. (1)

அவையடக்கம்.

செந்தமிழ்நாட் டுறையுமுதுக் குறைவுடையோர் தெரிந்து பிறர்க்
குறைக்குமா று—பைந்தமிழாற் சென்னிமலைப் புராணமெனப் பெ
யர்நிறுவிப் பயனகோ டற்கே—யந்தவணா மிசைவைகு மடலயில்
வேற் கிறைசந்நி தானத் தன்பாற்—புந்திதெளி தாத்தமியே னறிந்
தளவாம் புன்மொழியாற் புகல லுற்றேன். 2

ஆண்டகை பொறுக்குந் தொண்டராற்றிய குற்ற மொன்றுங்
காண்ட*கைமய ஞற்சொற் காதையின் சோர்பும் புன்சொற்
பூண்ட†கைதவ மெலாமும் பொறுத்திடுமெனக்கொண் டேன்வான்
சேண்டகை சிகர வெற்பேன் றிருவுளந் தெரிக்கொணதே. 3

கலிவிருத்தம். (இதுவுமது)

சைவவேதியாற் கிராமி சண்முகத்
தெய்வ ராட்சி சிறப்பை மொழிவது
வைய மீது மகிழ்ந்து சிகிடனு
செய்வு தொப்பவான் கோழியுஞ் செய்ததாம். 4

என்னச் செந்தமிழ் வாண ரிகழ்வரோ
என்னையு மொரு சிட்டனென் றேற்பரோ
சென்னி யப்பநின் செயலென் னெண்ணமோ
சொன்னன் மந்த வறிவிற் றெருகுயே. 5

நூல்வரலாறு.

அறுசீர்கழிநெடிலாசிரிய விருத்தம்.

போதமுடன் சூதமுனி வர்க்குரைத்த மூவாறு புராண முற்று
மாதவரிக் கலியுகத்திற் சிதையாத செப்பேட்டில் வரைந்து காஞ்சிச்
சேதிமத்தி லமைத்தவற்று சிரகிரிமான் மியமிதனைச் செஞ்செவி
யான் மாந்தி
யாதாவி னத்தலத்தின் மூதறிவோர் தமியேனுக் கருளினோரால்

*கைமை-கைம்பெண் †கைதவம்-பொய், வஞ்சகம்.

செப்பேடுகேண்ட சருக்கம்.

சந்தக்கலிவிருத்தம்.

தொலபசியி னிடச்சைவ சமையநெறி தொழுகுலச்சீர்
மல்கிவளர் மார்க்கண்ட கோத்திரத்தின் மாதவங்க
ளல்குசர வணவிரத முனிவன்றனை மறைக்கேள்வி
பல்கலையு மோதியுணர்ந் தவன்விரதப் பன்மேலான். 1

பிரமசாரி யத்திருந்து மில்வாழ்க்கை பெரிதுவந்து
மருவியுட னகத்துறந்து மறநாகி நாற்பொருளுந்
தெரியவுணர்ந் தைம்புலப்போக் கறிந்துசிவ தத்துவத்தி
னுரிய நிறைத் துறவுகனிற் சுகாதீத னாயினனால். 2

சாத்துவிக குணமடைந்து தாபதரோ டொழுகுவா
னுதுகழும்ப வேதாந்தக துட்பொருளை நவின்றுணர்ந்து
சீதநிகளுஞ் சிகரகிரி விளங்குமொரு சாரணைந்து
மாதவநா டொறுமபுரிகைந் தெழுக்கினையு மனத்தெழுநி. 3

வீற்றிருந்து மெய்ஞ்ஞான வபுகிளமன் மேலுமுண்டு
நோற்றிருப்பன நூல்களுள்ளே நோக்குதலுந் தேக்குணர்வு
ளேற்றுசிர கிரியிலகி சயநிலைப்புற் றெழு மொலியை
யாற்றலுறக் காண்டுமென வவ்வகாரயின மீதுணர்ந்தார். 4

சில்போதி லதிசயமே திளைப்பதன்றிப் பிறிதறிந்து
சொல்வோரு மின்றிமனந் துலங்கிவிதிர் விதிர்த்து நின்று
வேல்வேலர் திருவருட்கு முதற்காதம் விரும்பிமறை
சொல்வேலி யிடுந்திருவா வினங்குடியைத் தொழுதணைந்தான். 5

சார்ந்துசிவ மலையைவழி பாடுசுற்றித் தன்னொளிக்கண்
கூர்ந்துநுனி விழித்துள்ளே குழைந்துபுலா திகள்வேறு
சோர்ந்துவிழி ஞாபகத்துத் தூங்குதலும் பூங்கடம்ப
மார்ந்தபுய னனவினிற்சென் றடைந்தவன்போ லெதிரினின்றே. 6

அந்தணனீ யதிசயங்கேட் பதுமித்தன் தவம்புரிந்தா
னந்தவதி சயவரையு நமதுவரை ஞானகுணச்

சிந்தையனு தவினுனக்கே திளைப்பித்தாந் திளைத்தபடி
யந்தவரை யிமிற்காட்சி தருதுமென வருள்புரிந்தார். 7

அழுதழுது விழுந்தெழுந்து கடங்கண்ணீ ராருவிதர
வழுதழுது குடந்தம்பட் டடிபேணி யாளாபோ
பழுதாணக்குண் டோயாது பவம்புரிந்தே னெனவுருகி
தொழுதொருவிண் ணப்பமது சொல்வதுண்டு சுடர்வேலோய் 8

அவ்வையின் மாண்பியமே நாயடிய னறிந்திடுமா
றெவ்வழித்தென் றிறைஞ்சுதலு மெழிற்காஞ்சி புரத்தினிடை
செவ்வழித்தேன் பயில்கடுக்கைச் சிவபெருமான் சினகரத்துட்
சைவநெறிச் செப்பேட்டி லுள்ளதுசார்ந் தறிதியென்றார். 9

செய்யவனைக் கண்பரப்பித் தூங்கினேன் றிரும்பிமிக
வையகநோக் குபுவிழித்து மதனுதி வழிமறித்து
வையமெனக் கருளியவா றதுபுரிவ னெனக்கருதி
மெய்யுணர்விக் கெழுமுதிரு விருந்தபுர மேவினனால். 10

பெற்றவர்கண் முற்றவர்பாற் பிறமொழிந்து சிரகிரியின்
பற்றுமனத் தெழுதியந்தப் பருபதத்தை வணங்கினனு
கொற்றநெடுந் தனிவடிவேற் குளகனேநீ யருளியவா
றிற்றைபகா ளேகின்றே னெனமலர்க்கை குவித்துநின்றான். 11

புலன்களுமா னுதிகளும் பொருந்தியொரு வழிகாட்ட
தலங்களுமற் றுளபிறவுந் தணந்துதணந் தகன்றுடன்போய்
நலங்கிளரு மிமையவல்லி நாடொருமா தவம்புரிந்து
கலந்தறமெண் ணான்கியற்றுங் காஞ்சிபுரந் தனையடைந்தான். 12

சென்றறம்வாழ் மகடழுவக் குழைந்தபிரான் சேவடியி
னின்றிருநாங் குறுப்புமிகு நிலந்துறத்தாழ்ந் தெழுந்தேற்றி
மன்றலர்தூ யாகமத்தின் வழியின்வழி பாடாற்றி
யின்றடியேன் குறித்ததவ மெழிதினினல் குதியென்றே. 13

போற்றிவிடை கொண்டுபுறம் போந்துபுரி தவங்கள்பல்
லாற்றினர்கண் மடங்கடொறு மடைந்தடைந்து வைகிமறை

சாற்றமுதுக் குறைவின்றித் தலத்தினிற்செப் பேடுண்டாந்
தேற்றுமனத் தினனாக வதனைப் பெருமை செப்புமென்ன. 14

உண்டதுகே ளித்தலத்தி னுழிச்செப்பே டுறையுமறை
பண்டுளதென் றருமறையோர் பகர்ந்தமொழி கேட்டதல்லாற்
கண்டறியோங் காணுத தெல்லா முங் காஞ்சிதனி
லண்டர்பிரா னருளினுண்மை யுங் கதைநிகழ்த்த ரறிவுமிக்கோய். 15

தமர்மொழிந்த மாற்றமது கேட்டலுந்தா னுளங்கவன்று
குமரகோட்டந் தனிற்போயக் குமரனைவந் தனையாற்றி
யமரர்கோ வேயெனையாட் கொண்டதுல கறிவிப்ப
கமழ்குரவர் செப்பேடு காட்டெனப்போ தொழுமுறைகால். 16

சில்பகற்சென் றிடவொருநாட் செவ்வேள்சேய் திருவருளால்
நலவளங்கூர் திருக்காஞ்சி நகருறைநான் மறைத்தலைவர்
தொல்பதியிற் செமித்தத்திருச் செப்பேடு சோதிப்ப
வெல்லவருமவ ருமினை வறைதிறந்தங் கெடுத்துவந்தே. 17

ஆயவற்றுக் கபிடேகம் புரிந்தம்பு சனையாற்றி
மாயிருஞா லத்துள்ளோ ரியாவரையும் வாருமென்ன.
நாயகர்மண் டபத்திருந்து நவின்மொழிகேள் வியனறிந்து
மேயசர வணமுனிவ னுவகைவே லையிற்படிந்தான். 18

ஆடினன் கூத் தங்கைகொட்டி யகமகிழ மயிர்பொடிப்பப்
பாடினன்வேற் கிறைசீர்த்தி பாடியடி மலர்சென்னி
சூடினன்கண் ணீரருவி சொரிதரச்சூழ் வலங்கொண்டு
நாடினன்செப் பேடுபடிப் பவர்சபையை நணுகலுற்றான். 19

அச்சபையை வணங்கியொரு சாரிருந்தா னைந்தாய்ந்து
முச்சகமெய்ப் பியதலத்தின் காதைபல முறைகேட்டான்
எச்சரிதை யுஞ்சிலநாட் கேட்பளவி லகல்வடிவேற்
செச்சையங் கண்ணியன்சரிதை செப்புவான் றொடங்கினால். 20

சூரன்முத லாய்த்தொலைத்த சுடரிலைவேற் குளகனென்றும்
ஆரமலி பரங்கிரிசீ ரலைவாயா வினன்குடிமற்

றேரகங்குன் றேருட லெழிற்பழமு திருஞ்சோலை
பேரமர்மு விருதலனும் பிறழாம லுறைதருமால். 21

ஆங்கரருள் வளர்தமிழ்நாட் டகத்துவட பாற்றாணி
லோங்கலிலுந் தென்றிசையி லுயர்சிகர கிரிமீதும்
பூங்குரவன் குன்றுதோ றுடல்வகை பூதலத்தில்
நீங்கவரி தாயவைகு நிகழ்த்தினர் மற்றதுகேளாய். 22

சரவணமா முனியெழுந்து தழுதழுந்து விதிர்விதிர்த்து
பரவசமாய்ப் புரிந்ததவப் பயனைமனந் தனிற்றெரிந்து
சிரமிசைகை முடித்தழுது சேமநிதிப் பொருள்காணான்
கரமிசைபெற் றனுவகைக் கடலினுக்கோர் கரைகாணான். 23

அன்னதுகண் டவையினுள்ளோ ரதிசயித்த நம்பிநீரா
ரன்னவனை யாளுமைய ரியந்தகொங்கு நாட்டகத்துட்
சென்னிமலைச் சாரல்வைகுந் திருவிருந்தா புரத்திருப்பேன்
கொன்னெடுவேற் குமரனது கதைகேட்பான் குறித்துவந்தேன் 24

திருவிநந்தா புரவளமுந் திருச்சென்னி மலைவளமு
மருவியநாட் டினவளமு மறையவநீ யறிவீரென
வரையினிட மகிமையெலா மாற்றுநீவி ரெனவருக
வுரையுமென வெனைவினவ வொழுங்காமு தறிவீரே. 25

ஆதிசைவோய் வினவினதா கடியமல்லி லறிந்தவறைக்
கோதுசெப்பேட் டின்வரைந்த வுண்மையெலாம் பின்னறைவன்
வேதமுறை யுண்டவர்முன் விளம்பெளிதோ வென்றயர்ந்து
மாதவரைப் பணிந்துகண்ட காட்சிதனை மாற்றலுற்றார். 26

சென்னிகிரி நாககிரி சேர்ந்தபொன்னி கிரீசன்வேள்
கன்னலருட் கனககிரி கதிக்கதிண்டற் கிரிவேலர்
மன்னுமறச் சாலைகிரி மங்கலகி ரியின்மாலுந்
துன்னுசங்க கிரிகளெட்டுஞ் சூழ்ந்திடுபூந் துறைநாடே 27

---

*சென்னிகிரி-நாககிரி-பொன்னிகிரி-3-ல்-சிவசுப்ரமண்யம்.
கனககிரி-திண்டல்கிரி-அறச்சாலைகிரி-3 ல்- குழந்தைவேலாயுதர்.
மங்கலகிரி-சங்ககிரி-2-ல்-திருமால். ஆகக்கிரியெட்டு.

வான் சிறப்பு.

கலிநிலைத்துறை.

சம்புத்தீபம் பரதகண்டஞ் சாற்று திராவிட தேச
மம்பொனி யார்வானி நதியாம பொருநை காருசிந்தி
யும்பரமுங் கொங்கநா ரான்கினி லாதி-யோங்கியநா
டும்பர் பதியொப்ப வளமுயர்ந்த சென்னி மலையார்ந்த. 1

பனுவ லாட்டியி னுறுவெளப் பனிமுகிற் கிழமயித்
தனிவா னேக்கிநின் றலர்ந்து வெண்டரளங்கள் கொளிக்குங்
கனைய லைக்கடன் மேய்ந்து வொண்மைகலை விட்டெழுந்த
மனுபி ராட்டியி னுறுகொடு திருமபின மன்னே. 2

வாரணத் துவச வானவன பூந்துறை நன்னாடன்
சூரனைத் தலைதந்திட்ட வேலென மின்னித் துணையார்
வீரர் கெர்ச்சனை யனைவின் னதிரந்து வேளகருணை
மாரி யொப்பென மாரிகள் பொழிந்தன மலையார். 3

சந்தனக் கனுக்கழை தருக்கவி முரிப்ப வெண்முத்தஞ்
சிந்தநந்து முததங் குங் குமக் கிளைகளைச் சிதைத்து
கந்தி முக்கையும் வான்றிலே காஞ்சியிற் புகுந்து
சிந்தனந்தும பொன்னியிற சிநஜ பாய்ந்தது கடலே. 4

முடிமலை யருவி முகட்டிருந தருகிற் பாந்து
தடமிடை யிடையிற் றணிமணி பலவொளி விரிப்ப
படிமுடி யரசர் மூவரிற் பகர்முதற் சேரன்
முடி தடம் பூவா கணியென மொழியவொத துளமால். 5

சந்தனம கிலின் றாமந் தளிர்மரப் பாலின் றாம
மந்தணர்வேள் வித்தூம மருந்தபாக்கி லியின் றாம
மந்தாமு கிலுங்கூடி யணியணி சுழன்று தேங்கச்
சந்திரக்கு டைபோலொற்ற சரவணன் சயில மீதே. 6

சங்குக ளீட்டவோதை தாமரை முகையைக் கீண்டி
யுங்கரி யீட்டவோதை யூறுநீர் சிலையைத் தாண்டி

வான்-பெருமை, மேகம்-மழை.

பொங்கியங் கோட்டவோதை புள்ளினங் கிள்ளை கூண்டிற்
றங்கிடுங் கூட்டவோதை சாமவே தங்க ளொப்பமாம். 7

அல்லினி லல்லிபூப்ப தன்றியும் பகலிற் பூத்த
வில்லுமிழ் கழைகளோடு வேளங்கண் மருப்பு ராய்த்து
கல்லினின் முத் தஞ்சிந்த கரைத்தடம் வெள்ளந் தேக்க
கொல்லொளி குறிப்ப நோக்கி வயிரத்தை நிலவுவென்றே. 8

பதுமங்கள் பகலிற்பூப் பப்பணியி ரவினும் பூத்த
புதரினப் புகள்பாய்ந்த பொருவிமணி தடங்கண் டேக்கக்
கதிர்விட விருட்சஞ் சோதி கவிந்திடு பளிங்கிற்காண்
கொதிதிரை கடல்விட் டோங்குங் கொடுங்கனலி யாமென்றே. 9

கானவாட் கணைகள் பாய்ந்தீக் கரைகிழிந் தொழுகுதேனும்
பூனையா மடிநிறைந்து பொங்கிய சுதையும் பாலா
வீனுமே லப்பழுற விறுமலை யடுக்கின் றேனுஞ்
சோலைமா ரியின் பெருக்காய்ச் சுனைகடந் தோடியற்றே. 10

கன்னியம் பிறையுஞ்சூடி காதல னசலஞ் சுற்றிச்
செந்நெலுந் திணையுங் கன்னற் செழித்திடப் பணைநிறைத்து
பொன்னியைச் சேர்ந்து சோழன் பூமுடி யுயர்த்தி வேலை
தன்னினிற் பாயமாயன் சயனித்தான் கழங்க மற்றே. 11

சில்லரி சுதிகட் கூடச் சிறப்புள கிள்ளைபாடக்
கல்லரி குணப்பத் தானங் கடிமரப்புட் கள்போட
வில்லரி லேனு ழொப்ப விசைகுயின் மயில்களாட்
டெவ்வியும் பசுவுங்கூ டிமகிழ்ந்து பார்த்திருக்குங் குன்றின். 12

(எழுசீர்கழிநெடி லாசிரிய விருத்தம்.)

வானநா ளொப்ப மின்புழு ப்பாப்ப மடுக்களிற் சிலமலர் விரிப்ப
கானவேள் குடைந்து கண்ணிலா தூதக் கண்டுபூச் சங்கம் வண்டே
மானிலே டுவந்தா னூர்திகண் களிப்ப மணிப்பணம் விரித்து
முணடிப்ப—யானையோ டரியு மிசையம் பார்த்து படுத்திருந்தது
குன்றத் தடியே. 1

கலிநிலைத்துறை.

சென்னிகண் மாரிபெய்யச் சிறந்தனன் சோழ நாடன்
றென்னவன் கொங்கையாளுஞ் செய்தவப் பயன்க ளன்றோ
மன்னிய கடப்பத் தோளான் மலரடி யென்னுமேற்றி
சன்னதி யிருப்போர்க் கென்னதாழ் வுளதாலங் கண்ணே. 14

நாட்டுச் சிறப்பு.

கொங்க ணாடறு நான்கினிற் குறிதலை தமிழார்
சங்க நீடிய தலைவனா னெனவே தாங்கோணிப்
பொங்க மாதவப் பிராட்டியை வாமத்திற் பொருத்தித்
தங்கு மாபரன் றனைத்தநா டதுமகா நாடு. 15

அட்ட மங்கல மறுநதி வளங்களுஞ் சிறந்த
கட்டுவிங் கிதநகர் தொறுங்குளங் கழனி கள்சூழ்
கொட்டி யாம்பலு மரைமருக் கொடிமலர் பலபூ
மட்டு வேர்நறை மலிந்திடும் பூந்துறை நன்னாடு. 16

தெங்கு சொங்குமா கூவிளஞ் செறிந்துயர் மாகந்
தங்கு மங்குலங் கடந்துபான் றனிரதந் தடவி
யங்கு மிங்குபூ கழுமடர்ந் தவ்வன வளத்தால்
திங்கடிங்கண் மும்மா ரிகள்பொழி திருப்பூந் நாடு 17

மலைய மாமுனி மலையன் பணிந்திடு மீசன்
மலையு மாமயிற் சேய்விளை யாடிடு மகிமா
மலையு மெண்மணி மலையும் புண்ணுக்க சத்திசன்
மலையு மாமேரு மகுடநீள் பூந்துறை நாடு. 18

பன்ன லஞ்சது மறைகளும் வேத பாரகருங்
கொன்னெ டுஞ்சிலை மன்னருங் குலவிவாழ் கொங்கினிற்
பின்னி வெண்டிரை கொளித்திரு கரையொலி பெருக்கும்
பொன்னி யந்துறை தொறுந்திகழ் பூந்துறை நன்னாடு. 19

வெண்ணறி லாத்திரு நீற்றொளி மெய்யினின் விளங்கி
நண்ணி னோர்க்கரு ளிருநிதி வழங்கி நன்களித்து
பண்ணிசைப் புராணம் பயின்றிடப் பயின்றிடலாற்
புண்ணியந் தருதொண்ட நாடது பூந்துறை நாடு. 20

ஆய நாட்டினை வளத்தினை யளப்பதற் கெளிதோ
சேய செஞ்சடா டவிப்பிரான் சிவாலயம் பலவும்
பாய மாசுணப் பண்ணவன் சேதிபம் பலவூஉஞ்
சாயன் மஞ்ஞையோன் றலங்களும் பலவுமுண் டேனும். 21

அங்கோடிங் கோடி யுழல்வோர்க் கருளாம பிறைவொடு
வெங்கோ டுந்திகழ் கோல விடையொடு வருவானூர்
சங்கோடும் புனலோடு கருகொடி னறுகோடுஞ்
செங்கோ டாங்கோ டாந்திரு வாவுந் திருச்செங்கோடு. 22

சந்தக்கலிவிருத்தம்.

சீரோடு மோடரிக்கட் சிலையோடு நீலநுதல்
வாரோடு மிகன்முலைப்பான் மருவியதொண் டீசனன்னூர்
காரோடு பொழிலோடு காரிகையா ராடு பனி
நீரோடு காவிரிநன் னீரோடு நீரோடு. 23

தாமாரி யருந்தமிழ்வா ணருந்தாய தரும்போற்றுங்
காமாரி புட்பவன நாதனருள் கவ்விநுழோர்
தேமாரி திகழ்வானந் தெறிபாரி சாதமலர்
பூமாரி பொன்மாரி பொழிமூதூர் பூந்துறையூர். 24

ஓதுருவை யேகாச நுமைநேசர் பவநாசர்
தாதகிதோள் புனையிசர் சருவேசர் வாழ்ந்திருமூர்
பாதவிநீ மூலிநேடு வயலோடு மதகோடு
மேதிநறும் பாலோடு புனலோடும வெள்ளோடு. 25

ஞொந்தவிழ்பைந் தாரோடு நீரோடு குவித்தங்கோ
விந்தைமட மயில்பயில்மூ வேந்தர்வழி படுமானூர்
சந்தனஞ்செண் பகம்பாரி சாதம்பொது ளம்பொதும்பர்
வந்துமந்த மாருதமூர் வசைபதிரு நசையானூர். 26

கொழுமாத்தூங் கமழவிழுஞ் சோலைக்கு வளைமலரு
மெழுமாதத்துக் குந்தாது வயலின்வழங் கிளாமூதூர்
செழுமாத்தா ரியமுழக்குங் காஞ்சியிற்சி ரம்பரிய
வெழுமாத்தூர் சத்திசன் வைகுமெழு மாத்தூரே. 27

வேறு.

பூந்துறைவெள் ளொடுநசைய னெபூயாது பொன்பிராட்டி
பேழ்ந்துபதி முதனகரைந திருபதத்தேழ் நகரொன்றுய்ச்
சேர்ந்தவறு படைவீடாஞ் சென்னிமலைச் செவ்வேட்கென்
றுய்ந்தமறை யாளர்செப்பு வதறுகர்ந்து பகர்ந்தனையே. 28

திருநகரச்சருக்கம்.

கரையிரண்டு வரையிரண்டு காவேரி நதிதிரண்ட
வரையிலைகத் தீசனென மணலைலிங்க மாப்பிடித்து
குருமுனிவன் பூசித்த கொடுமுடியிற் றென்முகமாய்ச்
சரவணவே டானகுறித்த நகரமறு பத்திஞலே. 1

ஆயபதி முதலியவெண் ணென்பதிபி னணிமிகப்பெற்
றேபபல வளநலமெற் றிசைபெருமன் னட்டகத்துற்
சேபுறவின் னகடுதொடுஞ் சிரகிரியின் வடசாரன்
மேயதிரு வைவையமிக விளங்குதிரு விருந்தாபுரம் 2

அன்னகர் வளங்களாதி சேடனுஞ் செப்பவொண்ணு
தென்னவே பொன்னிதாண்டிக் குணக்கினி லிறங்கிநின்று
னென்னயாங் கிளத்தவலல னெங்குருவேன் முன்னேது
பின்னையா னறைந்தனல்லாற் பிறபொரு ளறியனேயே. 3

அறுசீர்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அரணம் வில்லுமிழ் பளிங்கு வணிதடஞ் சிகரி நால்வா
யரணம் வில்லுமிழ் தசும்பு வகிழ்கதிர் பரப்ப நேமி
யரணம் வில்லுமிழ் படைக்கை யருட்குக னுவகை மாத
ரரணம் வில்லுமி ழரங்க மதுக்கிணை யதுவே யில்லை. 4

கயமதி லரணந் தோன்றவ் வரணத்திற் கயமுந் தோன்றுங்
கயமிகுந் தெழுந்து சேல்கள் கமுகினிற் பாய்ந்து மீண்டு

கயமிகும் வலைய ரீட்டங் கைகளைக் கிழித்துத் துள்ளிஇக்
கயம்பிட ரியினுந் தாவக் கன்னியர் கண்களொப்பாம். 5

கலிநிலைத்துறை.

ஐங்கணை யருகிற் பூப்ப வகிழலை முரசமார்ப்ப
பைங்குயிற் காழமுதப் படைவலைச் சியர்கள் சூழக்
கொங்குபி ரதம்பூச் சோமக் குடைநீழற் கயற்கைபற்றி
யங்கரை யிருக்கு மாடவரைக் கண்டுமத னுறுற்றான். 6

அகிழ்கலை யாகக் கோட்டை யரைப்பட்டி யாகவீதி
யகமெலாம் பணிகளாக யம்மதிற் றனைவா ராகச்
சிகரிசே திமமுஞ் சென்னிக் குழலணி மௌலியாகப்
புகழ்முதுக் குறையோர் பூமி மர்தலங் கரித்ததொப்பாம். 7

இருபுடை யெழுந்த தெங்கு வீணிடுங் குலைகடங்கம்
பொருதின தொடைய லென்னப் புடைத்திரு மடல்கள்கூடி
மரகத வொளிபரப்பி மன்னு தோரணம்போற் காட்டு
மரிவையர் தனங்கண் டேங்கி யக்கனிசி தரும்வீதி. 8

பரத்தைய ராழ்கை மீட்டிப் பாடுவார் சிலமாடத்தின்
மரத்தரி வினவிப்பா டுமங்குலிற் பலமா டத்தின்
னிருத்தய ராடற் பார்த்து நின்றிடுஞ் சிகண்டியாடி
மருத்துற விறகுவீச மயங்கிடா தாடி நிற்பார். 9

முழவொடுவே ழைகண்டத் தொனியிசை முழக்கொன் றுலச்
சுழிமுனை யண்டத் தோங்கச் சூழ்ந்துதந்தி சருங்கேட்டவ்
வழியினில் வந்துமாதர் மருத்துவ நோக்கி மாலை
யெழிற்களுத் திடவாசித் தாலீங்கு காளையர்க் கெல்வாராம். 10

கமலாலயம்பதிச் சருக்கம்.

எழுசீர்கழிநெடிலாசிரிய விருத்தம்.

புனல்வரப் பரித்துப் பொன்மணை விறைத்து
பிங்கலக் குண்டிட்டு மேற்குர்

தனக்குளம் பொழிக்கித் தனிததனி மணிக்கற்
சதிரிதது மென்மே லுயர்த்த
மனைவிரி யடுக்கோர் பணிமுகிற் றடவ
மதியெழு நிலைபுக நடுவே
பணிபயங்கை வனும்போய்ப் பரவையிற் புகுநாள்
பலவுநீண் முடிதட வும்மே. 1

பலகதி ரொளிப்பய பங்கயா மலைபயப்
பதுமினி மதிமுக மாதர்
பொலிவொடு கலவி மடமிருந காளர்
புகழ்ந்திட மதனெறி விரித்துச்
சிலகர ணங்கள சிதரிடா நடாத்திச
சீலனு முறங்கிட வுறங்கி
குலவிநங் கொடிவேண் முன்னமே யெழுந்து
கூறுவா ரவன்றிருப் புகழே. 2

வேதமா கமஞசோ திடமனு சிற்பம்
விளம்பிய பரதநூ லனைத்து
மோதிபோர்ந் தாதி சைவமார்க் கண்ட
வுறுவன் மாகுலத் துதித்தார்
வீதிசூழ் பிறைமுக் கோணநாற் சதுர
மெழிலுறு மறுகோணம் வட்டம
வேதியாக் கினியோங் கிடும்பூர்ண கும்பம்
விளங்கிடும் வேதியர் வீதி. 3

திடவல குர னெழின்முதற் றனையாக
செங்கதி ரினைக்கண்டு சினந்த
கடிபுய னொடுவந் திடுமிளை ஞரையுங்
கடிதினிற் படவிட்ட குந்தப்
படைவலர் இளைஞர் பாவிய வீதி
பண்ணிசைப் பாவிரித் தோங்கும்
படிமுடி யரசர் வீதியிற் கரிமாப்
பந்திக டொறுந்தனு முழக்காம். 4

காணிக்கர் பணிக்கர் கண்ணுளா ராட
கம்புவி வசியர்கோ வசியர்
ஆரணியுட் சுற்று வீதியி லுறைவ
ரடியார்கண் மடமு மாங் காங்கு
மிரணிய மொடுமன் மணித்தொடர் தூக்கி
யிலங்குமங் காடிகை யியக்கர்
குரிசிறன் னகர்விட் டின்னக றுறைதற்
கோலமென் றில்லாட் கறைவன். 5

இப்புவி யுளரியா வருமெழிற் குகன்று
ளிணைமலர் நீழலை விடுத்து
வெப்பவு நீங்கா திருக்க நற்றவங்க
ளியற்றுவர் வேறொன் றுங் குறியார்
எப்புவி யோரு மீங்குவந் தோங்கு
மேருவு முடிவலம் வந்து
செப்பிணை முலையா ளையையுஞ் சேயுந்
தெரிசித் தாங்காங் குறைவார். 6

பூங்கடம் பணிவா னவனருட் பலத்தாற்
பூபல ராண்டாண்டு விரத
மோங்கவும் மகிமை யுற்று வானரச
ஞெண்ணரி யாசனத் திருந்து
தாங்குவார் மௌலி யதர்க்கு ளன்னகரிற்
றனிமையுாய்ச் சென்றபிற் படையுந்
தாங்குவே ளடியிற் றங்கினு லீன
மிலையென மனுட்டியோ டுறைவான். 7

(அறுசீர்கழி நெடிலாசிரியச் சந்தவிருத்தம்.)

நிரைமதியென் றெதிரவம் வரமயிலென் றதுகா நீரி லோங்கு
முரைவிரிய மரைகுவிய மயில்கரிய முகில்கவொள வாடி நிற்க
பிரமனுடை வனநடைகள் பயிலவிளம் பிடிபின்வரத் தடாக மாடி
வாவிராதி யரம்பைமுத லிவர்கணயப் புணர்ந்ததலை வாடி நிற்பர். 8

சிறுமதிவா ணுதலணிநீ றிடுமட வாளணியணியாய்ச் சிறந்த
நன்னீர்த்—துறையருகி லுயர்சிகர கிரியிலுறையைத் தொழுதுதடம்
புனறி ரட்டிப்—பொறுமையொடு புவியடிக ளுறவருந்த வரையி-
னருந் ததிக ரேனுக்கி—நறைமரையா னனமகிழா சியுமொழிவா
டனைநிகரின் னகரா ரென்றே.

மதிக்குடைய னுருக்குயர்ந்த ரல்லாமன் மன்னவர்களிற் குறைந்தா
ரிலை—நிதிக்கிளவன் றனதிறுக்கு முப ந்தரல்லா னிறைக்-
குறையு மெழியா ரில்லை—மதுத்தமிழின் முனிக்குயர்ந்த ரல்லாமன்
மடங்கிநுகர் மகவு மில்லை—மகத்தலைவன் சுகத்திலுக்கு முயர்ந்த-
ரல்லாற் குறைந்தமக்க ளில்லை மன்றும். 10

இரப்பவருக் கீய்வர்களே யல்லாம லிரப்பவாக ளாங்கு யில்லை
திருப்புகழை யுரைப்பர்களே யல்லாமன் மற்றபுகழ் செப்புவரே
யில்லை—பொருப்பனையே பொருளென்பா ரல்லாமல் வேறு-
பொருட் குறிப் பாரில்லை—திருப்பதியிற் பிறப்பவர்கட் சிறப்-
பவரே யல்லாமற் பிறப்பே யில்லை. 11

கலிவிருத்தம்

ஆறுறுநா ளுருவட் டமங்கலஞ் சிலைப்பே
ராறுகுஞ் சென்னிமலை யம்பிராட்டியூர்ப் புகழைக்
கூறுறு மல்லவரோ கூறுவர் யான்வல்லனல
மாறுத வாய்மையுள மாதவரே யென்றெழுந்து. 12

வேதமெனும பாற்கடற்கு விட்டமுது தோயநவ
நீதமெடுத துண்டசிவ நெறிவலரே நின்னடியே
னேதினதுக் காதரவு வொன்றுமலை கண்டதுமே
தாதையர்கள் காஞ்சிதனிற் சாசனமுண் டென்பார்கள். 13

நோற்பருமா தவமுயன்ற நோம்பினனால் வந்தடைந்தே
னாற்பெருங்கேள் வியின்மிக்கீர் நசைதீரச் சிகாகிரி
தோற்றின்மு மற்றதுமாய்த் தொன்றுதொட்டு வருங்கதையைச்
சாற்றுமெனச் சிரந்துலக்கிச் சாற்றுவங்கேட் குதியென்றான். 14

சிகரகிரிச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

அந்தணன் வதனநோக்கி யருமறை முனிவர் சொல்வார்
மந்தரம தனினாற்றல் வழுத்துதற் கெளிதோ சூத
னந்தரமு னிவர்க்கன் று நைமிசா ரணியத் தோது
முந்தைநூற் புராணமீண்டு வந்தது மொழிது கேட்டி. 1

முன்னைய யுகங்கண் மூன்று முறைவளர் நெறியினீடு
பின்னையிக் கலியுகஞ் சொற்பிறழ்ந் தறம்வழு வியல்கு
மன்னவான முனிவரெந்தை யாகம புராண மெல்லா
மின்னகந் தனிற்செப் பேட் டிலெழுதி வேற்றையி லுய்த்தார். 2

எழுதுசெப் பேடுமுன்ன ரெடுத்தது மிலையிப் போது
முழுதொருங் குணர்ந்தோர் சொற்ற மொழிதிறம் பாதெடுத்துப்
பழுதற ழோதும் போதில் வந்தனை நுவச்செவ்வேட்
குழுவலன் புடையை யென்பதுணர்ந்து முனுணர்த்தலன்றே. 3

செயிரறுமு னிவோர்விண்ணோ ரேனையோர் நெருங்கச் செங்கை
வயிரவாட் படையோ னோர்நாண் மகிழ்ந்துவீற் றிருக்குமெல்லை
யயிலிசை மகதியாழ்நா ரதன்முக நோக்கி யங்கண்
மயர்வறுசி றுபுன்மூரல் வழங்கியோர் மாற்றஞ் சொல்வான். 4

இசைமுனிவ னேயின்னோர் வினோதநீ யியற்று கென்னத்
தசமொரு நூறுகண்ணா விடைதரு கென்று சென்றே
பாசவரா தலகந்தாங்கு மனந்தனை யணுக வன்னோன்
நசைதவிர் முனிவ வீண்டு வந்தென மொழிதியென்றான். 5

பூதலம் வலஞ்சூழ் கொண்டு போதலும் வடகுடக்கின்
மாதிரங்கா வற்பூண்ட வாயுவின் மருங்கிற் போய்நீ
மேதினி முழுதுந் தாங்குஞ் சீர்த்தியை விளம்பினேனப்
பேர்தவன் மொழிந்த வார்த்தை பொராதுளம் புழுங்கிவந்தேன். 6

எனமனஞ் சினவுகொண் டியாதென வினவ வெல்லாந்
தனதுயர்ப் பென்றான் சேடன் றனக்கொரு செயலுமுண்டோ

பணாவ நீசொற்ற குற்றம் பொருத்தனன் படர்தியென்றா
னனையது பகரவந்தே னடுத்தநட் பதனான் மன்னோ. 7

என்றலுங் கொறுகொறுத்தே யெழுந்து நெட்டுயிர்ப்பு வாங்கி
நன்றுநன் றுலவையாற்றல் நாணியென் பேர மன்றோ
சென்றியான் வடபொற் குன்றை மறைக்கினேனென் றிரட்பணைத்த
வன்றிற லுளதெலாண்டு வதற்குரை செய்ய யென்றான். 8

புனைந்துரை புணர்த்தி நீங்கிப் பொருக்கமாருத முன்வைக
நனந்தலை குறுகயினை நாயக வருக வென்ன
மனங்கன்றற போல நிற்ப மற்றதை யவன்வினாவ
அனந்தனின றுரைத்த தாழ்வை யறைவயுட் கூசினேனால். 9

கூசுவதென் கொலென்று கொதித்தெழுந் ததனை நையப்
பேசுகெனறலும் பாதாளப் பிலத்தினுட் பெயர்ந்து சென்று
மாசுணா முன்ன ருஞ்சீர் வழுத்தினன் மனங்கொதித்தே
போசினந் தனையென்முன் னற்புகழ் பிழை பொறுத்தனெனன. 10

மீட்டுமுன் சீர்த்திகூறி மெய்பல வுயிர்கட் கெல்லாம்
வாட்டயில் பிராணனென்றே மறுத்தலும் வடகுன் றப்பவ்
கோட்டினை மறைங்கின்றேன் வீறுண்டெனிற் குணர்வி யென்ன
நாட்டின னீயெனன்ப னுதலி னவில வந்தேன். 11

நின்னது நினைவுக் கேற்ற வாறுநீ நிகழ்த்துமென்றே
யின்னிட மிபாழ்மன் கூறி பேகிபபின் னப்போகி
பன்னக மன்னர்கோமான் பணாடவி பரப்பியந்தம்
பொன்னசலத்தை மூடிப் பொதிந்தனன் புவனமஞ்ச. 12

கண்டன னுலவைவேந்தன் கதுமெனக் கன்றற் பொங்கி
யண்டமுந் திசைகளெட்டு மாயிரத் தொகையு மஞ்ச
விண்டுயின் செம்பொற் குன்றை வேரொடு களைவனென்றே
சண்ட வேகங்கொண் டார்த்துச் சதாகெதிப் பெயர்நிறுத்தே. 13

இடைவிடா தடர்த்துச் சேட னிருக்குழ் தரணி யேற்ற
படமொரா யிரமுங்கொண்டு படர்பெருங் குன்றைப் பற்றி
யுடலினை யமரச் சுற்றி யுயிர்வறத் தடக்கிநிற்கு
மடலினை நோக்கி யூதை யாடலொன் றிழைக்கலுற்றான். 14

மன்னுயி ரனைத்துமுள்ள சுவாசங்க ளனைத்தும் வாங்கி
தன்னுழி யடக்கிக் கொண்டு சதாகெதி யிருந்தலோடு
மன்னிலை யுயிரனைத்தும் பிராண மொன்றின்றி யலகப்
பொன்னுல குற்றோர் மற்றோ ரியாவரும புலர்ந்துவாடி. 15

நரம்புள வீணைவல்ல நாரதன் புணர்ப்பி தென்றே
புரந்தரன் முதலோர் தேர்ந்துவெள்ளியம் பொருப்பைச் சார்ந்து
கரம்பயில் மழுவல்லாளன் கனைகழற் பாதம் போற்றி
யிரைந்துநின் றடுத்த தெல்லா மெடுத்தெடுத் துரைக்கலுற்றார். 16

எம்மையா ளுடைய வள்ள லிளநகை புரிந்திருந்த
வெம்மனைப் புயங்கவேந்தை விழிக்கடை சாத்தி யூதை
நம்முட லுருவமெட்டி லொன்றென்று நபவா திங்ஙன்
கொம்மெனப் புரியுமாட லடங்கெனக் கூறுங் காலை. 17

ஐயநின துசெய்வனென் றடிதொழீஇ யொதுங்கும் போதி
மெய்யவெங் கூழெந்து மேருவை யடர்ந்து மோதி
யொய்யென முடிகடம்மை யுடைற்றலுஞ் சிலபொற் கோடு
செய்யதென் றிசையிற்சென் றுசிறந்ததோர் பணதோ டன்றே. 18

கொங்கிடை பொன்னியாற்றின் தென்றிசை குளிர்ந்த ரங்கம்
பொங்கியெம் மருங்கு சூழ்நற் பொருநையின் வடபாலுப்பண்
டங்கியோர் முடியமர்ந்து தயங்கிய ததற்கு நாமந்
திங்கள் வந்துதவுந் தெய்வச் சிகரமாவ ரையென்றோதும். 19

ஓதிய சிகரந் தன்னை யோர்பணம் விடாமணிப்ப
ஊதையஞ் சினந்து மோத வொதுங்கியே பொன்னியின்கீழ்
பூதலம் புகழாக கிரியெனப் புடைத்து நீள்த்
தாதகி சூடுந் தோளன் றனைத்தகா கிசனென்றே. 20

நாகமேல் நகமிரண்டு நடுத்தடத் திருந்து கொண்டு
போகும்வா ரணத்தை யெலலாம் பொடிபடுத் ததன்மேலாக
டாகமா யிருபா லொன்றாய்ப் படிந்துமே னோக்கவாதி
நாக மேர்பதின் முடியா நற்றவக் குன்றமென் றும். 21

சிரகிரி புய்த்தகதோற்றஞ் செப்பின னாதி சைவோய்
யருநெறி ஞானி தோற்ற மறுமுகக் கடவுடோற்றந்
திருமகட் கணேசன் றோற்றந் திருச்சென் னிமலைதோற்ற
லுரிபசெப்பேட் டிற்கண்ட துரைக்குவ னுவந்து கேளீர். 22

சத்தியஞானி தவமூர்த்தி சருக்கம்.

சத்திய ஞானிஞால மல்கி யாசலங்க ளெல்லாஞ்
சித்துக ளாம யோங்குஞ் சிகரமேர் படியிற் சார
மத்தியிற் சோதிதோன்ற மாத்திரை யுண்டு புக்கி
சத்தியைக் கருத்துளுன்னித் தாணுவைச் சுற்றி நோக்க. 1

அருந்தா மாமுத மோர்பா லருந்தவ முனிவரோர்பாற்
றிருந்து தாபதர்க ளோர்பாற் சித்தியவித்தியாத ரோர்பால்
வருந்து ராகிருக்குந் தெய்வ வாலகில் லியர்களோர்பாற்
சொரிந்தவ வேள்விபாற்றுஞ் சுருதி யோரொரு பால்வைகும். 2

செந்துயி ரனைத்தயக்குஞ் சஞ்சீவி னியொருபாற் றுண்டஞ்
சந்துசெய் துருப்புக் கூட்டுஞ் சந்தான கரணியோர்பா
லுந்துமம் புறப்புந் தீர்க்குஞ் சல்லிய கரணியோர்பால்
நந்துருவி ரணந்தீர்க்குஞ் சமான நன்கரணி யோர்பால். 3

மூப்புவெம்பி ணிசுரக்காடு முதலன தீர்க்குங் கைப்பு
யாப்புறுந் தலைத்தீ ரெட்டி யருங்கரு நொச்சியோர்பால்
பாப்பினுட் சுதைவெண் சாரைப் பரப்பினமோர் பாலப்பால்
காப்பறு மருந்தினீட்டங் கணக்கிலை குணிக்கற் பாற்றே. 4

திருக்கிளர் திருவனல்குந் தெய்வவுவைந் தருக்க ளோர்பாற்
பெருக்குமா மகத்திற் பொங்கிப் பெருகிடுந் தீர்த்தமோர்யாற்.

பொருக்கெனக் கண்டுகாணு திருக்குமோர் பொய்கை யோர்பால்
பருப்பதச் சிகரத்துன் றின்பன்மையா ரளக்க வல்லார். 5

காண்பதற் கரியபுள்ளு மிருகமுங் கவினு மோர்பால்
மாண்பொரு வீட்டந் தன்னை மறைத்தனல் மருட்டுமோர்பா
லூண்பொரு வின்மைதன்னை யுண்டென மதிக்கு மோர்பால்
வேண்டிய வேண்டியாங்கு விரும்பினர்க் கருளு மோர்பால். 6

தவச் சருக்கம்.

கண்டிறும்பூது கொண்டு கனகமா ஞெகி தோற்றன்
மண்டலம் பூழியன்செய் மாதவ மென்று நாதன்
முண்டகம்போற் காலிட்டு முகநிளா குகைக்கு ளோமென்
றுண்டுவைம் பூதமோடா தொடுக்கி யைஞ்சத்தி யுன்னி. 1

நோற்றிடச் சிலகாற்சென் றுறுமையி லக்கினி கிளம்பி
தோற்றிடும் வெள்ளிநாகத் தோங்குமா தேவி கோட்டத்
தாற்றார்க ளத்தங்கண் டவார்வம்போ னுமைய வம்மை
யாற்றல னுற்றலாற்றுந் தவத்தெரி யெனவுள் ளோர்ந்து. 2

(சென்னிமலைச்சிச் செந் நிமலைவந்த சருக்கம்.)

தென்றிசை யெழுந்தீங் குற்ற தீபனித் தென்றலென்னக்
குன்றுறை செல்வி யேற்றுக் குறித்தெனை நோற்றநாதன்
குன்றலு ருமலாங்கு குறித்துளப் படியளிப் போ
மென்றுளங் கொண்டமு தாயுமெழிலுறு வைகும் வேலை. 1

சந்தக்கலிவிருத்தம்.

கங்கையைத் தரித்தகயி லேசனைக்கொண் டாடி
யங்கயற்க ணம்மையைக்கண் டஞ்சிலியா ப்ரிங்கி
யங்கமுறு மூனைதசை யார்க்கமனத் தீப்பச்
சங்கையுற்று வாடலையன் றுனெருதா ளிய. 2

அன்னைமதி யாத்துறவிக் கியைந்தவ ருட்டாறு
வென்னை மதிப்பாரோ வீங்கிருப் பதிறலென்னா
வென்னை மதித்தோர் புரத்தண்ட நடுவோங்குஞ்
சென்னிமலை மாமருடே மேருவிற் சிறந்து. 3

நோற்றிடு மெஞ் ஞானிக்கரு ளுட்பமுறை காலு
மேற்றதென வுள்ளியுமி றைவனிடப் பாகு
மேற்றுவிட லாந்தவஞ்செய் தென்று சேயி ருவரு
மேற்றபணி மாதரோடெ ழுந்துவரும் போது. 4

ஷை வேறு

புருதிமதி யனசுருள்வெண் பணிகுடைக விக்க
விருபுடையு மகவிருவ ரெழுதுகைகு விக்க
வரைசிகர வடியிறவு வடிவொகிபி ராட்டி
வரவமர ரிதுசமய மெனவெழிப ணித்து. 5

சரமசர நிறைமவுனி சருவபுவ னதி
பரசிவயி கௌரியணி பருவமக லாத
திருவடிவி குறளிணடு நடனமிடு தேவி
சரணமல ரடிமுடியி றழுவிமுறை யறைவா. 6

ஷை வேறு

சம்பரிய யதனெதிர்ப்பி னுஞ்சமரிற் கஞ்சா
நிம்பனெடு சும்பனிட னெட்டமருக் கஞ்சி
யம்பதியி லுந்தலைந்தோ மாயியரு ளொன்ன
வும்பர்க டொழுவுமைசொ லுய்திபுதை யுற்றே. 7

வல்லவுண ராவியை மடிப்பன் றருநீழற்
செல்லிலன விடைகிளவிச் சென்னிமலை யுஞ்சேய்
சொல்லுமுன் புணரியுற்றுந் தோழியர்கள் சூழக்
கல்லினடு வோங்குகுகைக் கண்ணருகிற் புக்கி. 8

இறும்பூதுவை யிறும்பூது கொண் டெம்பிராட்டி நோக்க
திரும்பூதிர நிருமபூதிரத் தண்ணிந்துதென்ற லூர -

கரும்பூவிலி லுறும்பூசில கயினைகொடு நீட்ட
சுரும்பூதிட வரும் பூவையைச் சூழ்ந்துமயி லாட. 9

மலையரவி னுக்கிரைசில் வனகலுழ னீட்ட
மலைமகளைக் கண்டிட வலஞ்சுழன்று நிற்கக்
கலையினங்க ளிருபுடைவெண் கவரிகளி ரட்ட
தலையினதி யணிந்தகழுன் றணிப்பவிளங் குலையே. 10

கலிநிலைத்துறை.

வல்லியந் தனத்தை மான்கண் மறுகுடடிக ளுண்டாய்ந்து
கல்லெழுந் தனத்தைப் போலக் கன்னியைச் சூழ்ந்துநிற்கும்
வலலிளந் தனத்தைத் தாங்கு மருங் கொடிப் பாங்கிமார்க
ணெல்லையந் தனத்தை நோக்கியீசன் முன்னவனைப் பார்த்த. 11

பாங்கிய ரெழிலைக் கண்டு பைங்கலாபங் கணுணி
யாங்கவர்க் கரசிமெய்கண் டுணிசிறை விரித்து லாவ
தாங்கிடு கதிர்வே லையன் றனைக் கண்டு நடித்துநாத
னோங்கிய குகைக்கணின் றுருங்கொடு கூவித் தன்றே. 12

அஞ்சுகஞ் சிலம்பைச் சுற்றி யரிங்கனிதுண் டத்தூக்கி
மஞ்சுகஞ் சரும்பையொற்ற மணிதன மெய்யாட் கீய்ந்து
வஞ்சகஞ் சிலம்பையற்ற வல்ல னண்ணலுந் தாயோடு
சிஞ்சிதஞ் சிலம்பவந் தார்களென்றுபோய்நி குஞ்சிற்பாட, 13

சத்தி முனிகண்கட்சி மான்மியம்.

இத்ததி முடிக்கரைவிட் டெழுந்து மெஞ்ஞானி யையை
புத்தக பதத்தில் வீழ்ந்து புரண்டிடம்வ லமாச்சுத்தி
யுத்தமி யெம்பொருட்டா யுளங்கனிந் துவந்த தாயிக்
கோத்தகை மாறென்செய்வே னென்றுள முருகித் தேர்ந்து. 1

எழுந்துகை சிரத்திற் கூப்பி யிருவிழி யாழிபொங்கி
யெழுந்திரு வாகும் வீழ வீன்றதாய் துண்டப்பபோலக்
கொழுந்துவிட் டெழுந்த வேணிக் குவையிருபு டையுந்தோய்வச்
செழுந்துவரி தழ்வாய்மெய்க டிடிக்கிடத் தேங்கிநின்று 2

முத்தொழிற் கிறைவி போற்றி முதுமறைக் கிளவி போற்றி
சித்துவிற் சித்தே போற்றி தேடொணாப் பொருளே போற்றி
சத்துவகு ணநீ போற்றி சதானந்த ரூபி போற்றி
யத்திமுன் னொரும்பிறு கவனத்துயிர்க் குயிரே போற்றி. 3

நோற்றிட நோக்கி யென்னை நூக்கிடா நூலிவந்து
வாற்றலுக் கென்னகைமா றளிக்குவே னங்கந் தத்த
மேற்றிடுஞ் சத்திசத்திய ஞானிநீ யின்றோ டென்னச
சாற்றிய நாதனுச்சி தனைமுகந் தன்பாய்த் தாவி. 4

நாதமே நற்சத்தியாகு நானேநீ யல்ல வேறு
யோதுவார்க் கொன்றுமில்லை யுண்மையிந் நோதி நாமொன்
றுதியாயுன் னிச்சேய்நீ யாளுவீ ராள்வீ ரென்ன
வோதியம்பு ய்ச்சீர்கை யாலுமைய ளட்சதைக வே. 5

பஞ்சதுந்து மிமலாரம் பழமறை முழக்குந் தொல்சீர்
மிஞ்சுமா கமமுழக்கும் புராணத்தின் மிகுமுழக்குஞ்
செஞ்சொலாற் கிழியும் பூவை யினங்களுஞ் செப்புமென்றால்
விஞ்சையர் மறையோரங் கண்விளம்பமற் றரிதோ வென்றே. 6

இந்திரன் பதத்து மாயோன் பதத்துமே லிலங்கியோங்கி
வந்தனப தத்துங்கந் தவரையினும பரங்குன் றத்துஞ்
செந்திலி னிடத்துஞ்சீ ராவினன் குடியினு மெஞ்ஞானந்
தந்தவே ரகத்தும் வேதஞ சாற்றுகுன் றிடங்கடோறும். 7

பழமுதிர் சோலைவெற்பும் பைங்கண்கள் பரப்புஞ் சோலை
குழமயிற்க ணங்களாடுங் குமரகோ ட்டத்தும் போல
வழகமா வரையிதென்றே யறுமுகக் கடவுள் வானோர்
தொழவினி திருக்குமென்று லதின்றிரஞ் சொல்லப் பாற்றோ. 8

தாமரைக் கிளவன் செந்தாம ரைககண்ணன் சசிமணாளன்
மாமலர் மாரிபெய்து வழுத்தி வந்தனைக ளாற்றக்
காமர்பூந் தத்தைமென் சொற்கௌரியோ டயில்வேற் செங்கைக்
கோமக வேள்வியேற்றக் குளக னெஞ்ஞான்றும் வைகும். 9

திருவிருந்தாவனப் பிராட்டி தன்மான்மியம்.

சீர்த்திகள் விளங்குஞ் சென்னி மலையினின் வளமுமாங்கு
மூர்த்திக ளெழுந்த தன்மை மொழிந்தன னினிக்கே ளினியா
யூர்ச்சிதமு னிவாதேவி யும்பர்க ளிடுக்கண் டீர
வார்த்தியாப் பணிட்பெண் ணுரு வடுத்திடும் வனத்தெழுந்து. 1

கலிவிருத்தம்.

வந்தருட் பிராட்டியைக்கா வந்தனைசெய் யொப்ப
பந்திபந்தி யாக்கதலி பைங்குலை தணிப்ப
சந்தனத்த ருவிற்குயி றன்னிசை கிளப்ப
நந்திமுழவம் முழக்கு நாதத்தினுக் கொப்பாம். 2

மாலணி தொடைவனத்தின் வண்டுசுதி கூட
வாலுள சிகிமாலோடு மண்ணதிரா தாட
சூலணி முகில்வளைந்த சூரியன்கீர் நாடர்
தாலரசி னின்றுசுக மைய்யபுகழ் பாட. 3

மாங்கனி சிதரவண்டு வான்கிழம்பி யோட
பூங்களி னிருந்தவண்டு பூவையரை நாட
தேங்கமுகு வாணுறைந்து தேவர்களைத் தேட
வாங்குதல வன்னைபுக ழாரறைய வல்லார். 4

ஐயைதவத் துங்கிரங்கி யையன் வரும்போது
பொய்யையுரை பூக்கொர்றைது வென்றுசில நாகங்
கையின்வா யினும் பிடுங்கிக் காட்டளவி லிட்டு
ஓவயனுக்கு மியன்றுக்கொண் டக்குளியி லாட்டும். 5

கொம்பிற்கூ டமைத்தபுட் குஞ்சுகிழுவப் பிதற்றுங்
கொம்பிற் கோடுறைகனிக் குலம்டியாக் கொடுப்பர்
மம்பொற்கா விருதிணைக்கு மகலவுரை யென்ன
சம்புத்தி விலாதியா டவமிமை யாற்றே. 6

ஆற்றல்பி ராமிழுந லாங் கொழுமாதர்
மூத்தமக ளைங்கரன் முதற்றிகைசக் கொட்டும்

காப்பாகு வாகவுமை காற்கோ ளூக்கிட்டாள்
ளாக்கமண வாளனய னிந்திரன் றெழிப்ப. 7

காவியுடை கட்செவிக் குழைகண் மணிமாலை
யேர்விரிந்து மட்டிளந் தன்றுடவ் ளீந்தாய்
பூவடியிரண்டும் புடையிற்பொரு ளூச்சேர்த்தி
பாவையெனக் கையைமுழுந்தாள் படிய நீட்டி. 8

அசைவிலா அதந்தரி முச்சந்தி காலெழுப்பி
யசவையெழுத் தஞ்சையு மருமூனையில் நாட்டி
சசியரிகா லேகாமற் றம்பிதிரு மாந்து
நசையொடுறும போதுசமர் நடந்ததை நவில்வேன். 9

கலிவிருத்தம்.

சம்பு மெய்யிடஞ் சாரத் தவஞ் செயு
மெமபி ராட்டியை யிச்சித்த பாதக்க
சும்பன் றம்பிநி சும்பன் சண்டமுண்டன்
கும்ப லெல்லாங் குறைத்ததைக் கூறுகேன். 10

சும்ப னிசும்ப சம்மார மான்மியம்.

திருவி ஞயகன் செம்மாலைக் காவினின்
றிருவி நாயகனை சிந்தை வைத்து முன்
மருவி நாயகன் மாற்ற மிலாதமெய்
மருவ நாயகி மாதவஞ் செய்திட. 1

நீலமாமலை நேர்பரா மூவிழ்மலை
காலன் போலக் கடாவித் திரிசும்பனை
சூல பாணி யெதிர்ப்பிருந் தோர்ஸிலர்
தூல தேக நிசும்பனை சேர்ந் காவிலர். 2

அண்ட ரண்ட புவனத் தாசனரை
கண்டு கண்டு கடியமர் செய்திடு
சண்டன் முண்டனெனுஞ் சூரர் தண்டலை
கண்டு வண்டுமாங் காம்பல் வுண்டுமே. 3

காத லாகிக் கனிந்த வனத்துளே
பூத மாதவப் பூவையைக் கண்ணுற்று
வேத மாலய நாயகியோ வீறு
வோத வார்வலரென் றுள்ளத் தெண்ணி. 4

நம்பிரான் சும்ப னிம்ப னடுவினிற்
கும்பிரா னட்டி யாக்க மனங்கொடு
நம்பு ராககதர் ஞான சொரூபமாந்
தெம்பி ராட்டி யெதிரினில் வந்துமே. 5

ஒண்டி யாகத் தவஞ்செய் நியாரும்
தண்டை யாடவ ரற்றன சண்டனு
முண்ட னேதி முடியுமுனே யம்மை
கண்டி றந்தனட் காதக ரஞ்சிட. 6

நோக்க வந்தனஞ் செய்து நொடியினிற்
றூக்க வல்லவன் சம்பயன் மாலையு
மாக்க முற்றரி யாசனச் சும்பனுட்
பூக்க வந்தருட் பூவை சிரோமணி. 7

என்றது கேட்டுமை யிங்கு தவநெறி
குன்றிடு மாடவர் கூட வொணாதெனச்
சென்றுட னேயரு காசனத் தீர்முன
நின்றடி போற்றி நிகழ்த்தினா காட்சியே. 8

கூற்கொண்ட மேனி துவண்ட துடியிடை
பொற்கண்டு சீனிசொற் பாதிப் பிறைநுதல்
வேற்கண் டோட்களை விற்புருவஞ் சங்கம்
பேர்க்கண்டம் பூமுலை யோமலை யொப்புமால். 9

அஞ்சுகத் துண்ட மமைந்த விரன்கம்
பஞ்சினைத் தண்டைப் பதமயிற் சாயலார்
வஞ்சியைக் கொண்டவர் மாதவ மேதவ
மிஞ்சியும் மண்டை விளம்ப வலாரலோ. 10

சொற்றிடுந் தூதர்க் கணிவடஞ் சூடியாங்
குர்றிடு மாதுக் குழைம றுத்தா லுங்கைப்
பற்றி யிழுத்துப் பயமுறுத் தென்னிடம்
வெற்றி யணியும் விறற்பெற வேகுவீர். 11

கலி நிலைத்துறை.

சும்ப னுத்திடத் துணிந்துவன் சண்டன் முண்டனுநீட்
டம்ப டைத்திர ளொடுவரா ஆளித்திங் குவந்து
வம்ப றைத்திட மடக்கியான் முன்னுரை யென்ன
வெம்ப லத்தினைக் கடந்துற விறலணி தேவி. 12

அங்க முற்றும் வியர்த்திட வாவெனச் சினந்தாள்
சங்கை யற்ற படைத்திர ளோததுவா னையின்முன்
சிங்க முற்றன வடர்ந்தவெம் டகைவரைச் சிந்தி
யங்கை யிற்றிம ரடங்கிடா திருவர்முன் னடுத்தார். 13

மடக்கிச சண்டனு முண்டனும் படைகெட வருத்தாங்
திடுக்கங கண்டிமை யிருவிழி சிவந்திட வாகி
னொடிக்குட் டொண்டொரு பலித்திரு நிருதரை நூறி
முடிக்கை கொண்டுயிர்ப் பலியென மொழிந்தடி வைத்த. 14

வலித்தற் கூறிய சண்டனை முண்டனை வதைத்த
நலத்திற் பேருசா முண்டியாம் புலியுள்ளார் நசையாய்
மலித்துப் பூசனை கண்டுநீ மகிழ்விடை யென்னச்
சலித்துப் போர்முகம் விண்டவர் சாற்றிடச் சும்பன். 15

மும்மதக் களிறென முழக்கிவாய் பீறுமே னோக்கிக்
கொம்மை யெக்களிப் பொடுசெவி நாடரைக் குமைத்து
வெம்மை மிக்கசொற் றாமக் கண்ணனை விறற் படையோ
டும்மை நிக்கிர காவன மழித்தியென் றறைப்ப. 16

சேடனெக்கிட வெண்டிசைக் களிற்வாய் சிதைத்த
கோடு சக்கிடக் குமறிடக் கடற் கயல் சிதற
வோடு சக்கரத் துகளெலாம் வான்பரி யுரைச
நீடு சக்கர யூகமாய் நெறியயைச் சுழன்று. 17

தண்டு சக்கரங் குலிசமொள்வா டணற்சூலம்
சுண்டு விற்கணை தோமரங் கப்பண முசலங்
கொண்டு கைத்திட வசுரர்கள் கொக்கரித் தார்ப்பக்
கண்டு வுட்சினக் களிப்புமை யானனம் பரவ. 18

சீறிடாக் கிளிபோற் செனித்தெழு மாதர்கள் செண்டாய்
மாறுவா ரண்ட மனைத்தையு மகங்கையால் வாரி
யாறிடாச் சினத்தா லடங்கிடாப் பிடாரி முதலாய்
நாயினார் தண்ட மழுப்படை யொடுசில நாரி. 19

மெய்யுறு கேச முளத்தினுங் கிளம்பிய வீரத்
தையுறு மாதர் தனிமுக நோக்கிவா னையை
மையுறு தாமக் கண்ணனை மடலொடு மடக்கிக்
கொய்யுறு மேன வணியொடு மெதிர்ந்தனர் கொல்லோ. 20

ஆற்றொடு பிசித ரனற்படை சத்திமா ராவி
மாற்றிடத் தொடுத்து வையக நடுங்கிட வுரத்தா
ரேற்றம திவர்களவர்களி னுக்கை யிறசெந்நீர்
தோற்றம ணதிபோற் றுலங்கிடப் பொருதியு மாறு. 21

எழுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வெங்கரித் திரட்டி லரிபுகுந் தன்ன
விறற்படை யனைத்தும் பிடாரி
சங்கரித் திடமுன் புகைகண்ணன் முதலா
னவர்வரச் சத்திகண் மடக்கி
யங்கநீர்த் தசைக ளலைகைகட் களித்தவ்
வுயிர்களை நமனிடத் தளித்து
திங்களைப் பிளந்து றழ்நுத னீற்று
டிருவடிக் கமலத்தை யடுத்தார். 22

பொருதிடாப் பேடி பிறங்கொடித் தோடிப்
புழுநர கண்டந்திட மூட
ரிருவிழி நாடி திரண்டு நீரோடி
யிருபுய நிறைந்திட வாடி

யொருவுரை யோடா திதழிரண் டாட
வுடலெலாம் வியர்வைக ளோடக்
கருவிய நீடு மசுரர்மு னோடிக்
கடும்படை யழிந்ததென் றறைந்தார். 23

துண்டத்தின் வாய்வாற் றுலங்கிடச் சேடன்
றுளையினெய் நாகத்திற் பாய
கண்டத்தி னணிகட் கசட்டரை தேடக்
கடுந்தன ளொட்டத்திற் பூப்ப
திண்டித்த ஞுறும்பிற் றிசைநகஞ் சிதற
செறிந்திதழ் மீசைமுன் சிலும்ப
துண்டித்த மாற்றம் நெட்டுயிர்ப் போங்கி
சும்ப னிசும்பனை நோக்க. 24

நிசும்பனுங் கதுவா யெந்திர மேறி
நெடுஞ்சிலை தூணி தோளணியப்
பசம்பொனன் மகுட மிடக்கையம் பரவ
பானுதேர்ப் பரிதடு மாற
விசும்படர்ந் துலக முதிர்ந்திட விசும்பி
யிழுத்தரி களும் வெளிப் படவங்
குசம்படி கரணி கொக்குவெம் படைசா
கரத்தலை யனவிரைந் தார்ப்ப. 25

பெரும்படை யடரத் தண்டலை நெருங்கிப்
பின்னவன் றெறுசினந் திருகிச
சரந்தொடு மகிமை யறிந்தபி ராமி
யாதியாந் தகும்படை யனைத்துஞ்
சரிந்திடு மெனவிங் குற்றவ னிசும்ப
னுநிமை தகைந்திட வண்டம
மருந்தெழு கடலு மனத்தையும் வாரி
வாயினிற் போட்டிட வல்லான். 26

அனங்கனை யளித்த வனத்தொடர் வாக
னுற்றலை யடக்கிடு மாற்றுன்

சினங்குடி மிகுந்த தியலை யானே
சிதைக்குவன் கனைத்தினி னீவீர்
கனங்கடம் பரிகா லாளரி கடிதீ
யென்னவே லாழிபி னாகை
மனுங்கதிர் சூலம் வச்சிரங் கலப்பை
வடிப்படை கைகொடு மாதர். 27

சீறிவெம் படையைத் திசைதிசை மடக்கிச்
சிரங்கை காற்கூறு கூறாய்ப்
பீறிமண் படியக் கழுகுற விகள்பேய்
பிறிவுக ளுமக்கெமக் கென்று
கூறியின் பொடுகூத் தாடவி ரத்தங்
குளமடுக் களைக்கின் றோட
மாறியங் கனையர் களிப்புற வுற்று
மடித்திகழ் கடித்து பற்கடித்து. 28

ஆதியா மூவ ரமரினுக் கடங்கா
ததிபல வணிப்படை முற்று
மூதைநேர் தூல மெனவழிந் தோட
வோங்கிய கைப்படை முடித்த
மாதரா ராவி மடக்குவ னென்ன
மயனெந்திரந் திருப்பிடச் சிறி
பாதகா மீரா தடவென வுமையாள்
பருவிமு னடுத்திட நிசும்பன். 29

கடுஞ்சினங் கொண்டு நெடுஞ்சிலை வளைதனுக்
கதுவொடு தொடுத்திடப் பகழி
விடும்பொழு தொன்று படர்க்கையிற் பலவாய்
விரிந்தனற் பொரிகளைச் சிதற
நடுங்கிட வண்டஞ் சடசட வென்ன
நங்கையின் முன்னுறச் சூலா
னெடுங்கணை நொருக்கிக் கடுங்கணை தொடுக்க
நிசும்பனுட் புகுந்துகை யடைந்த. 30

கடுங்கணை படிந்த விடமேலாங் கிழிந்து
காரெனக் குருதிகட் பொழிந்து
மடங்கிடா தெழுந்து விடமெலாங் கலந்து
மதித்ததோ வெனவிழி திறந்து
கொடுஞ்சிலை வெம்போர் கூடிடா திவளோ
டென்னவென் றிடிக்குர லார்ப்ப
மடங்கல் போலெழுந்து பலகைவா ளேந்தி
மடிக்குவ னிவளையென் றெதிர்ந்தான். 31

குயின்வடி வாளைக் குறுகியெ டான்வா ளாற்
குறைகொள வீசிட மாற்றி
யயின்மிகு வாளை யங்கையா லுறுத்தி
யரியயன் விடுபடை விளித்த
பயன்கலை யடைந்த பருத்ததோள் வாட்கை
படிவிழோ சுழட்டினில் வீச
செயம்பெற வஞ்சி திருவிழி நோக்க
சிறுநகை செய்தன னீசன். 32

நிமைக்குமு னெழும்பி மரவட்ட மெரிந்து
நெடுங்கதை யெடுத்திறு மாந்து
துமிக்கினி கிழும்ப யிடம்வலஞ் சுழட்டி
யெறிந்திட மாற்றிவன் பின்போ
ரமைக்குமுன் சிரத்தை யரிந்து துண்டாட
வதிபல நிசும்பனு மாய்ந்தா
னுமைக்கம லத்தாட் சார்ந்த சத்திகளுக்
குணர்த்துவள் பின்படை வலமே. 33

கலிநிலைத்துறை.

களத்தினின் முடிந்தோ னண்ணற் கரியமா லாதிதேவர்
களிப்புறு முனிவர் முற்று நடுங்கிடக் காய்ந்தவன்கை
துளிர்ததிடு திமிர மாறச்சூரர்க ளில்லா தோங்கிக்
களிப்புறு சும்பனண்ட கடாகநீ றாக்க வல்லான். 34

பாவியுமடிந்தா லல்லோ பதியினிற்சேர் வாரண்டர்
தேவியு மொழியுமாற்றஞ் செறுக்களஞ் சிதறினோர்கள்
கூவிம ணிசும்பன் மாய்ந்தானென் றிடக்குமறிச் சும்பன்
றுவிட வில்லுமம்புஞ் சராசர நடுங்கித் தன்றே. 35

தடம்புய வலர்கள் கோடி தனுவலர் கோடியாளி
மடங்கலில் வருவர்கோடி மணிரத வலர்கள் கோடி
கிடங்கழி ருறைவர் கோடி தேசியில் வருவர் கோடி
அடங்கலுஞ் சூழவரோ கணித்திட த் தேர்மேற் சும்பன். 36

அண்டர்கட் கண்டீ தென்ன மாகுதோ வென்னவேறு
ரண்டத்தின் மரையவாதி சேடனுந் தவித்து நெக்க
சண்டனோர் புரவி மார்க்கந் தடுத்திடத் துவசத் தேரை
யண்டையி னெருங்கி யாழி தொடலபி ராமிதேவி. 37

மாதர்கட் சிவந்து சீறி வரும்படைத் தூலமேரின்
மாதுகற் புத்தீப் பூந்த வாறுபோற் புக்கி வாளா
லோதுதற் கடங்கா வெள்ள முறுதளந் தீய்த்துமிஞ்சிப்
பாதகன் றேரும் பாகன் பரிகொடி கடிதிமின்னார். 38

வேறுகூ விரியிற் றுவி விற்கழற் கோலிநாணி
லூறுவாழி கணேழ்பூட்டி யுறைப்பொடு விழுத்துச் செவ்வி
மாறிடாட் டிகளுனொள்க வடுக்களை யாற்று மம்மை
சீறிநேர் நோக்கிச் சும்பா நில்லெனச் சிலைவளைத்தே. 39

கடுங்கணை யொன்றுபத்து நூறெனக் கணக்குமாறு
தொடுத்தவன் சென்னியாதி பதமுற்றுந் துளைந்திரத்த
மடங்கிடா தொழுகிப் பொன்னிமல்கி யாழியினிற் புக்கத்
தடமபுய வல்லா னையாச சாஙகோப சாஙகமாக. 40

சாபத்தைக் காலின் மெட்டிச் சரமிரு கையுமாறுக்
கோபித்துக் குறிஞ்சிமுற்றுங் கோடைபோற் பொழியக்குன்றூர்
நீபத்தொ டையன்சீற நில்லென வாற்றி யன்னை
தீபத்தின் கிரணத் தாலே தீய்ந்தது பகழியெல்லாம். 41

தீய்ந்துமுந் தீயனெஞ்சம் திகிலிட யிடியம் பேசித்
தோய்ந்த கூரம்பு பின்னுற் றொடுத்திடத் துலக்கிமெய்யை
தேய்ந்திடாப் பகழிகோடி தெரிந்திட வையை மாற்றி
யோய்ந்திடாப் பல்கா லாற்றி யொடுங்கிடாவ லியின்மிக்கார். 42

காந்த பாணத்தாற் சும்பன் கைச்சிலை யற்றுவீழப்
பாந்தளா யப்பச் சீறிப் பணவிட நெடிய வொள்வா [ள்வா
ளேந்திவெங் கையைப்போற் பூய்ந்து வெதிருற யிறைவி யொ
டாஙகியோர் பலகை யேந்தித் தாவினு ளருகுவொப்ப. 43

இருவருங கதும்பிச் சுற்று யிறைவிவாளொ ளியிற்பாப
னிருவிழி சிதரச் சாரி யிடம்வலம் புரிய நீசன்
கரிவுரு பொருதமாய்க் கருத்தினை யறிந்து தோள்வா
ளொருநிமைக் குள்ளாய்க் கன்னி யோஙகிவெம்ப டையில்வீப்ப.

அறுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்.

இருவிழி யழற்கட் சிந்த விமையினில் விமலப்பாவை
யுருவினைக் குறைப்பனென்ன வுரப்பொடு வடர வாளாற்
கருமைய சிரத்தைச் சிந்தக் கருங்குருதி கள்வாய் பொஙக
விரணம்வல் சும்பன் மாய்ந் தானிமைய வரிடுக்கந் தீர்ந்தார். 45

இரத்த பீஷன் சம்மார மான்மியம்.

அறைத்திடு நிசும்பர் சும்பர்க் கனுசிவா னுவரி வெந்தீங்
குறைத்திடு குரோதி யென்பா டந்திடுங் குழவி யாவான்
எறித்திடு மணிப்பாம் பேந்து மேதினிக் கனுட்டங் தாஙகும்
விறற்புறு விறப்புக் கஞ்சா வீரனும் வெகுளிச சொல்லான். 1

குறணிலை நாட்டி நோற்றுக் குரவன்பா லார்க்க மெய்யிற்
சிறுதுளி யேனு மண்ணிற் சிதறிடத் தன்போ லொத்த
வுறுதிமற் பொருதும் வீர னுதித்திடவரங்கொண் டும்ப
ருறைதரு நீழற் கொண்டா னொங்கிய ரத்த வீசன். 2

றும்மதங் கழிற்றின் மத்த முடையவன் முகம லர்க்கான்
வெம்மையக் கிருத்த வண்ண மெய்த்தட வாகு வல்ல
னம்மனத் தமைநெஞ் சாய்வோ டணிப்படை நாஙகு சூழ
வெம்மைகிட் டடரத் தேவ ரஞ்சிட வவடண் டார்ந்து. 3

சியத்தைக் கண்ட வீர சிம்புள்போற் பாய்ந்து வந்த
தீயொத்த சேனை யெங்குஞ் சிதறிடா மடக்கி மாய்ப்பத்
தாயத்த சிசுவை யொட்டாத் தப்பினர் தயங்கி யோட
வாயத்தஞ் செய்ய நோக்கி யசுரன்விற் கோல மாதர். 4

கணைதொடு முன்னி ரத்த வீசனைக் கவிப்பான் னீசன்
தணலெழு சரங்கண் மாதர் தயங்கிடத் தாக்கச செந்நீர்
மணமிகு மஙகம் பொங்க மாதாக ளிழையா தோங்கித
துணிவொடு சூல மாதி படையெலாங் கையி லேந்தி. 5

அடன்மிகு மிரத்தவீச னஙகத்தை யீர வார்க்கஞ்
சுடர்மிகு புடவி மீது சுசிப்பொறி சிதறி யென்ன
தடமிகு திண்டோள் கொட்டிச் சமரினுக்கெழுந்தா காயம
விடர்துளிக் கொருவ ராக விழுங்கிமண் ணிறைந்துமல்க. 6

சப்தரு மிரும்பூ தெய்திச் சமரென விளையு மோவென்
றுத்தமி யடியிற் றாழ்ந்து வுதிரமோர் துளியொன் றுக்குச்
சுத்தசௌ ரியராயத தோன்றிச சூழ்ந்தனர் வனஙகண் முற்று
மெத்தகை செய்வ தேனென் றியம்பவம் பிராட்டி சீறி. 7

இருநய னந்தீச் சிந்த விதழ்துடி துடிக்க நெற்றி
புருவமு மூந்தி வாயிற் பொஙகிடக் குருதி சாலு
வெரிவத னங்க முற்று மிருட்படி வமதாய் மையுற்
றிருந்தன மிழுக்க விவ்வா றிருஞ்சின வடிவ மாக. 8

மாகாளி தோற்றம்.

உரையறி தாயமாய மூலகமு மஞ்சமேவுந்
திருவுறு வின்னின்று தோன்றிச செறிதரு கோரமுற்றும்
பொருதின தென்ன நோக்கம் பொழிதெறு மூகமையார்ந்து
செருவலி காளிதோற்றஞ் செப்பினங் கருமங் தோல்வாம். 9

கடுஞ்சின வடிவிற் றோற்றிக் காளிமா தேவி யன்னை
தடஞ்சிலம் படியைப் போற்றச் சாற்றின ளிரத்த வீச
நெடும்புவி யிடம்பொறாது நெருங்குடல் லுருவா னின்னே,
மடங்கலு ளமைப்ப னீயான் மதித்தது புரிதி யென்ன. 10

துட்டர்கண் மெய்யிற் செந்நீர் சொரிதிவ லைகளொன்றேனும்
வட்டங்க ளுறுது நின்கை மலிக்கபா லத்தி லேந்தி
நெட்டநக விரைச்சி யோடு நெற்றன்வாய் மடுத்தி டென்ன
வட்டங்கை யிடத்திற் சூல மழுப்படை கையி லேந்தி. 11

புன்னகை யோடு மாடன் மேவிரேழ் புவனத் துள்ள
மன்னரைப் பகைத்த ரத்த வீசன்மெய் வகிர்ந்து வீழச்
சின்னமாய்க் குறைத்துச் சிந்தத் திடத்தொடு காளி செந்நீ
ரன்னமா மென்ன வூனோ டருந்தினள் கபாலந் தாங்கி. 12

நிலத்தினிற் றுளிகட் சிந்தா நிருதர்மெய் யூறுஞ் சோரி
துலத்தகை யிறைச்சி யுண்ணத் துலைந்தனர் தொடுவ பூக்கார்
நலத்தடங் குடைந்து தேவர் நடுக்களஞ் சேர்ந்து தேவி
மலர்ப்பதம் போற்றித் தாய்நின் மகிமையை யறியவல்லோர். 13

கருணையங் கடலே யன்பர் கருத்தினிற் கருவி யான
பெருவிளக் கொளியே நின்னைப் பேசவா யிரந் தெண்பூ
மருவிய மணியே கண்ணின் மணியெனத் திரண்டு நின்ற
பெருமையே பெருமை வாய்ந்த பெண்ணலாற் பிள்ளைப்பாருண்

வரும்வழி யுறைத்து மாற்ற மாயிடா தவுணர்ப் பூண்டை [டோ.
திருகிய செல்வி யென்று தேவர்கண் மொழிய வாழ்த்தி
தருநிழ லுறைவீ ரென்று சாம்பவி யேவித் தூவுங
குருதியுண் காளி தன்னை யுவகையிற் கூவித் தோலைவாள், 15

சோரிதூ றம்பூ சிந்தா துண்டுவ னண்டஞ் சூழுந்
தாரு நீ ழலினி லண்டர் தங்கவாழ் வளித்த வாற்றுற்
பெருசா ருண்டி யாழு வுலகினி லிருபாற் பெற்ற
வீரமுந் துவிநின் பாலே விளைந்தன விறலி னோடும், 16

நறைவிரி தருவின் மேய புலவரின் மிக்கார் நன்மை
பெறநெறி வரங்க ளீய வுளித்தன பெரும்பூ மீது
குறளிவே தாள பூத கொடுங்கணங் களுமுன் சூழப்
பொறைவல மேவி வென்று புகழ்வலி மையுமேற் கொள்வாய்.17

செந்நிமலையென் றிந்தச் சிலம்பினுக் கென்பே ரச்சாசு
பந்நிலம் புகழ நின்பேர் காளியீ னகர மாமேர்
முந்நிரு படையை வென்ற பிடாரிபேர் மொழியு மோர்காற்
செந்நெலுஞ் செழிக்க விக்கா திருவிருந் தாபுர மாமால். 18

அணங்கின மேவிப் பல்கா லவனியி னறையி யங்கி
வணங்கிடா தார்க்கு மேலாய் வழுநாட் கடந்த காலை
மணங்கமழ் கொன்றை வாகன் மான்மழுக் கைய னாரெண்
குணன்குலங் கடில மில்லாக் கோசிகப் பிரிய கோமான். 19

மாரனைக் காய்ந்து காலான் மறலியைக் கடிந்த வல்லோ
னாரணந் தலைவன் றூண்ட வஞ்செய வுன்னி யாறுங
காரணக் காவினின்பா லுற்றிடுங் கருணை மேவி
தாரணத் துறவர் முன்னிற் சக்கர நடுங்கித் தாழ. 20

ஊர்த்த தாண்டவங் களாற்றி யும்பர்சீ யத்தைச் சாந்து
சீர்த்தி யாய் வாழ்வா யென்னத் தேவியும் வினவ வேற்று
வார்த்திடு குறளி னோடலகைகள் புடையிற் சூழப்
பூர்த்திகட் கமல பாதம் பணிந்துபூ வாலஞ் சென்றார். 21

எழுவரைப் புகழ்ந்து நீங்க ளிருப்பினு மிருப்பீ ரப்பாற்
செழுவரை மகுடத்தின்கீட் டிசையினிற் கவரிட் டோங்கி
யெழுவரை யடியி லீச னிலங்குவ ரவரைப் போற்றி.
பழுதிலா வாழ்வீ ரென்னப் பணிமொழி யுமைப கர்ந்து. 22

உம்பர்கட் குரைத்த மாற்ற மொதுங்கிடா தம்மை நீசர்
கும்பலைச் சிதைத்த காதை கூறினேன் முனிவா யின்னுஞ்
சம்புவிக் காவின் மேவித் தாண்டவம் புரிந்து நோற்ற
வம்பிகைக் கருள்செப் பேட்டி னமைந்தவா றறைவன் கேண்மி,

அகமாற்க தாண்டவமான்மியம்.

எழுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சரவண முனிவா தனிநுதல் விழியா
டவவடி வப்பணி யேற்று
பரிமள மணியாப் பணிமுகின் மேனி
பற்றிய நீறுநாற் படிக
நிருமலஞ் சிலைபோ னின்றொளி பரப்ப
நிகரிரு கிரணமு மொவ்வா
தருண்மறைக் கடலி லலர்ந்தபூம் பாவை
யதிசய மாற்றதி சயமாம். 1

சந்தியி லந்தி வண்ணனை யிருத்திச்
சரந்தனை வெளிவிடா தழுத்தி
மந்திர மெதுவோ மாற்றிட வறியேன்
வந்தனைக் குழறின னெந்தாய்
சிந்தையெவ் வழியோ சிறந்தகா விருந்தஞ்
செய்தநற் றவத்தினுக் கிரங்கி
கந்தமன் வேத வனத்திற் றுந்தோணிக்
கடவுளுங் கணங்களுஞ் சூழ. 2

நந்தனூர் மாலை வனமடுத் தணங்கி
னருந்தவ நளிவிழி நோக்கி
சிந்தைநெக் குருகித் திருமுக மலர்ந்தார்
சிக்கடர் சிகழிகை திருத்தி
வந்தனன் றிருந்தார் குழலியென் றனையு
மறைவிழி திறந்தையை வணங்கி
வந்தனஞ் செய்ய மகிழ்ந்தக மார்க்க
தாண்டவ மாற்றநெஞ் சுன்ன. 3

சீரசா கரனுந் திசைமறை யோனுஞ்
சேய னம்மான்முதற் றிசையோர்

நாரத னாதி யாழ்வலர் முனிவர்
நற்றள சீவன மெழுந்த
காரண னாதி பகவனைத் தொழவக்
கடவுளுங் கணிங்கைதங் கருவி
யோரிசையாக முளக்குவீ ருமையா
ளுளங்களிப் புறநடம் புரிவாம். 4

சுத்தமத் தளமால் தூக்கிச்சாப்பிடச்
சுதி *யெதி யாயயன் முளங்
தத்திமித் தகதை தாக்கிய நாதந்
தம்புரு வீணையி னாதஞ்
சுத்தியர்ப் புதகாற் சதங்கையி னாதந்
தோன்றியோர் முகமதாய் லகிக்க
வத்திமு னெரும்பீ ருந்தொகை யாவு
மகலிடாப் பிர்மைத்து நிற்க. 5

பஞ்சரா கமுந்தோ டையம்பஞ்ச தாளம்
பண்ணொடு மங்களம் பாட
செஞ்சிலம் பிறைவேள் செவிபட மதர்த்து
சிகியினின் றிருநடமாடி
யஞ்சுக மொழிதா யருகுற வாகு
வாகனன் பொறிகவான் றுலங்க
கொஞ்சிமுன் னுறவா றிளம்பிறை வேணி
குலாவிடத் தாதகி வாகான். 6

நஞ்சணி கண்டனயன மூன்றுடையா
னளின பாதநூ புரங்கள்
கொஞ்சிட முயலகன் குறுகிட வடத்தின்
கொங்கொடு கொங்கு வாகிருபா

---

*எதி யென்பது—தாளயெதி, சமயெதி, சுரோதவகையெதி, கோபுச்சயெதி ஒன்றுக்கு மும்மூன்றாக ஒன்பது பேதமாம். இதின் அம்சங்களைக் காட்ட விரியும்.

லுஞ்செறிந் தாட வுழுவைதோ லிடையி
னிறுக்கிய கச்சுங குச்சாட
செஞ்சடைக் குழவி மதிநதி மழுவு
மொழித்திடத் தமரகஞ் சிலம்ப. 7

கட்செவிக் கநக ணங்குழை யடியார்
தலைவடங் கழுத்தினி லாட
வச்சனை நீறு பாடீரசந் தனஞ்சாந்
தணிநுத லானன மலர்ந்து
கசசிடைக் கையா லெழுத்திநீண் வலக்கை
கனியெடுத் துண்டுண்டு வுமையுன்
பச்சமெய் தந்தந் தந்தன தானம
பதிநக நாகத்தோங கென்ன. 8

தட்டிய தவண்டைத் தொனியுளத் தமிந்து
தையலுங் குறுநகைத் தருக்கி
மெட்டிட விமல னறிந்தக மார்க்கந்
தேசிகம் வடுகுசிங களமாய்ச
சட்டென வினவுங் காலமுங் காட்டிச்
சாரியின் முளமுந் தழுவி
நட்டன மூன்று செய்தன ரென்று
நவின்றிடச் சரவண முனிவன். 9

வணக்கமா யிருகை சிரமிசை கூப்பி
வல்லவ னுடிய மார்க்கப்
பணைத்தையுந் தேசி வடுகுசிங் களமும்
பரவிய சாரிசட் டெனுமெண்
பணித்திட வேண்டு மாமுதுக் குறைவீர்
பகரரி தாம்பர தத்து
னுணுக்கமா யியல்வை யொன்றுவிட் டொன்றாய்
நுவலுவன் னுறந்திடா முனிகேண். 10

கலிவிருத்தம்.

அகத்து ளுட்குண மூன்றக மார்க்கமாய்
வகுத்த தேசிகம் வடுகு சிங்களஞ்
சகித்த சாத்விக ராசத தாமத
மிகுத்த பண்மை சமம்வண்மை மென்மையாம். 11

ஆதி தவிபா தனுக்கு ப்ரகாசம்
நீதிபுட் பாஞ்சலி நீளற் புயங்க
மோதுவாக்யம் வைப்புத் தேசி யொத்து
மாது ளுக்குக் கவுத்தம் வகுப்புமே. 12

தேசி தெண்டபதஞ் செப்பு மீரெட்டு
மீச ஞடினசாங் திசைக்கூத் தீதே
தேசி வடுகுஞ் சிஙகள மிந்நடை
தூசி நின்றல் நடித்தல் சுழித்தலே. 13

அகமார்க்க சாரி யனங்கந் துதியாங்
ககமன்ன நாதங் கனிந்த விரதி
சகணை தார்ப்பணஞ் சன்னி துரங்கலி
லைகூளெண் டாளமே லையனின் றுடிஞர். 14

செயமங்க லம்வன்ன மட்டயஞ் சீர்வி
செயநாத மன்ன லீலகு சேகரம்
வயமா நந்த மன்குடுக் கபி நந்த
மியலுமெட் டாளாப் புசசாரி யிட்டனர். 15

சிங்க விக்ரீடி திரியச் சிரவன்
னங்க மல்லிகா மோதபி நந்தம
தங்கஞ் சாபலீ பின்ன சதுமுக
மங்கதி டெங்கி யதியச் சணமாம். 16

பிரிதி திரிமாத் திரிகையும் பெத்தா
பரணமோ டிராறு தாளம் பணித்தற்
பிரபந்த சாரியு மாடின பித்தன்
கருணை திட்டியின் பேதமுங் காட்டுவன். 17

சமம லோசிதஞ் சாசி பரலோகி
நிமலியுல் லோலித நேரனு விர்த்தி
யமரல் லோகித மாந்திட்டி யெட்டினு
ளமையும் விரிவை யறைப்ப ளுட்டமே. 18

சூரியன் மாலினை சூழ்ந்த சிறத்தை
சாரு சந்த மிலச்சை விடனையுங
கூரு முக்குளங் குஞ்சி புமலிமை
நீர சிம்ம லலிதை திருதையாம். 19

விதர்க்கி தம்வத்த முகுளம் விளம்ப
மதுர விப்ராந்த மாவிப் புலிதைய
கொதரை வீகோ தரை கூறுபத் தொம்ப
திதுச°ரு சாரிநே ரின்னி ரசநேராம. 20

கானகை யர்ப்புதங காட்டி டும்பகை
யானகை யாங்கருணைநகை வீரங்
தானு ருத்திரஞ் சாற்றிய வெட்டுமு
மானிதா யீச்சுரி திட்டி மாற்றமேல. 21

சினுத்தை யிருட்டை குரந்தை திழித்தை
தனிப்ப யானிசை தரித்தை சுகர்த்தை
செனித்த விம்மிதை சிறந்த வெட்டுமே
லினிப்புகலுவ னீச்சுர திட்டியே. 22

பிரமரி வசனம் புரதலம் பின்னும்
பிரவே சந்தை ரகிதம் பிராகிருதங்
திரலூர் நிற்கிரமஞ் செப்பு மெட்டுமான்
யிருநே த்ரபேதங் தெளிந்த தாண்டவம். 23

புருவச் சேட்டை புகல்வ னுக்கேபனம்
புருடி குஞ்சிதம் பூபா தன மின்ச
துரமி ரேச்சித நைகர்ச்சிதஞ் சொல்லும்
பிரிவு வேழொடு பிறபுட் சேட்டைகேழ். 24

நிமிட்ட முன்வட்ட நீள்பிர சாரிதம்
சமம்வி தற்கித மஞ்சிதம புரிதம்
விமலப் பிரகிர்தம் விதாடித மொன்ப
தமைத்தல் விசேட மனத்து முந்நூலாய். 25

நடிக்கும் தாட்பேத மூன்றொடு நாற்பதி
லெடுத்த தேசி வடுகெழிற் சிங்கள
மடுத்த பேத மூன்றுமென வத்தையு
மொடித்தல் வேண்டு மெனத்தொழு நோக்கியே. 26

எழுசீர்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மொழிகுவன் விதான கரணமாமிடமி
லகித்தொடு முறைகடி சாரி
கழியகாற் கட்டுப் புரிய முள்ளாழங்
கடிதலங் குஞ்சிப் பூர்தல்
கழனடுக் கப்போக் கப்புதல் வீசற்
கம்பித்தல் வாங்குத லனுக்கல்
வழியிடு புகுதற் குன்றுதல் நெறித்தல்
மன்னுகால் விதான மச்சாரி. 27

சுரிவாங் குதலெண் மூன்றுபே தமுமே
தேசியம் வடுகினை சொற்றத்
தெரிவாய் சீர்தாட் சுத்துத லொட்டல்
கட்டுதல் வெட்டுத னீக்கற்
புரிவாய் முருக்க லனுக்குதல் வீசற்
போக்குதற் குடுப்புத லாங்கத்
தரிக்காற் பதினென் றுமிதன் பேதஞ்
சார்ந்திடுஞ் சிங்கள மெட்டாம். 28

மெய்யினைச் சாய்த்த லிடையினை நெழித்தன்
மின்பினுங் குவித்தலுஞ் சுழித்தற்
கையினைத் தூக்க லசைத்தலும் படுத்த
லணைத்தலுங் கதைத்த னிப்பேழு

மையனு டிடுங்கா லங்களா றறைவ
னெட்டுநா ளிரண்டொன் றரைகாற்
றுய்யமாத் திரைகை நொடிநிமை நேரென்
றளவெடுத் தனநூற் றுணிவே. 29

தேவர்க டுதிப்பப் பூமக ளெழிப்பத்
தேவியுங் கண்டுகண் களிப்ப
மூவர்பண் சிறப்ப முனிவரா ழிசைப்ப
முதுமுறைப் பநுவலாட டினிவாய்
நாவினி லிருப்ப நான்முகன் கஞ்ச
தாளந்தாட் டிசைவுற வடிப்ப
பூவனுஞ் சொரிய மான்மிரு தங்கம்
புயத்தணிந் திருகையா லடிப்ப. 30

நந்தநந் தனன்வே ணிசைப்பவிந் திரனு
நடுக்கிலாச் சுருதிவா யிசைப்ப
சந்திரன் பணியைத் தந்துமு னொளிப்பச்
சண்டனுங் கிரணத்தைச் சுருக்க
கந்தனு நடிக்கக் கணபதி நடிப்பக
கங்கையும் வேணியி னடிப்பச்
சுந்தராம் பிகையுன் சிந்தையின் படியே
தந்தநந் தோமென நடித்தார். 31

கலிநிலைத்துறை.

நடித்து நாயகன் மங்கையை நகையுற வணைத்திவ்
விடத்திற் பாகமே யளிப்பது விதியதாம் வேலை
னடுத்த மேருவு முடிமலை நின்பெய ரறையத்
தொடுத்த தால்நாக கிரியிரு பாலொன்றாய் சொலிப்பாம். 32

நிர்த்தன மாடிநின்று நிமலையின் மனங்களிப்ப
வர்த்தபாக மெய் யொன்று யமர்ந்தன நாககுன்ற
மர்த்தபா கமமினுடு நாமம்பூ துறையா மாதி
சத்திமுன் சார்ந்ததாலிம் மலையின்பேர் நிமலை யாமே. 33

அக	இராசத குணம்	7	தேசி
மார்க்	தாமத குணம்	8	தெண்ட பதம்
கம்.	சாத்மீக குணம்		ஆகப்பதினாறு வீதம்
	வண்மை		
	மென்மை		
	சமம் இஃதகமார்க்கம்		அகமார்க்கச்சாரிக்
தா	தேசி - முன்பின்னடி		கிரத்தாளம்.
ண்ட	த்தல்		
வம்	வடுகு-நின்றநிலை நடி	1	அனங்க தாளம்
	த்தல்.	2	திரியங்க தாளம்
	சிங்களம் - கமூன்று	3	அன்னநாத தாளம்
	நடித்தல்.	4	இரதி தாளம்
	இஃதகமார்க்க தாண்	5	சகணை தாளம்
	டவமென்றார் பரத	6	தர்ப்பண தாளம்
	நூலார்.	7	சன்னி தாளம்
		8	தரங்கலீலா தாளம்
	அகமார்க்கதாண்		
	டவம்.		ஆளாப்புச்சாரி.
1	ஆதி	1	ஜெயமங்கள தாளம்
2	தவிபாதம்	2	வன்னமட்டய தாளம்
3	அனுக்கு	3	விஜெயநாத தாளம்
4	பிரகாசம்	4	மன்னலீலா தாளம்
5	நீதி	5	இலகுசேகர தாளம்
6	புட்பாஞ்சலி	6	சிங்கநந்த தாளம்
7	நீளல்	7	குடுக்க தாளம்
8	புயங்கம்	8	அபிநந்த தாளம்
1	வாக்கியதாண்டவம்		
2	வைப்பு		பிரபந்தசாரி.
3	தேசியொத்து		
4	துணுக்கு	1	சிங்கவிக்ரீடித தாளம்
5	கவுத்தம்	2	திரியச்சிரவன்ன தாள
6	வகுப்பு	3	மல்லிகாமோதகதாள

4 அபிநந்தன தாளம்
5 மதங்க தாளம்
6 சரபலீலாதாளம்
7 பின்னசதுமுகதாளம்
8 டெங்கிதாளம்
9 அதியச்சண்ட தாளம்
10 பிரிதிதாளம்
11 திரிமாத்திரிகைதாள
12 ஆதிபெததாபரணம்.

இத் தாளங்களால் மூன்றுவித சாரிட மாடினார் பரமசிவம்.

திட்டிபேதமென்பது

1 சமவிழி.
2 அலோசித விழி
3 சாசி திட்டி
4 பரலோகி திட்டி
5 நிமிலி திட்டி
6 உலோகித திட்டி
7 அனுவிருதி திட்டி
8 அல்லோகித திட்டி.

ஆக 8 இதில் வரும் பேதகங்கள்.

சஞ்சாரி திட்டியாவன

1 சூரிய திட்டி
2 மாலினா திட்டி
3 சிறந்தை திட்டி
4 சஙகத திட்டி
5 இலச்சை திட்டி
6 விடனா திட்டி
7 முகுள திட்டி
8 குஞ்சிதை திட்டி
9 புமலிமை திட்டி
10 சிம்மமை திட்டி
11 இலலிதை திட்டி
12 திருதை திட்டி
13 விதர்க்கித திட்டி
14 வத்தமுகிள திட்டி
15 மதிர திட்டி
16 விபபிராநதை திட்டி
17 விபபுலிதை திட்டி
18 அகோதரை திட்டி
19 விசோதரை திட்டி.

ஆக 19.

இரசதிட்டி பேதம்.

1 கானகைக் கண்
2 அரபுதக் கண்
3 பகைக் கண்
4 பானகைக சண்
5 கருணைக் கண்

6 நகைக்கண்
7 வீரக்கண்
8 உருத்திக்கண்.

ஆக எட்டு.

தாயீச்சுரிதிட்டி பேதம்.

1 சினுத்தைக்கண்
2 இருட்டைக்கண்
3 குரந்தைக்கண்
4 திழிக்கண்
5 பயாநிசைக்கண்
6 சுகுர்த்தைக்கண்
7 தரித்தைக்கண்
8 இம்மிதைக்கண்.

ஆக எட்டு.

ஈச்சுர திட்டிபேதம்.

1 பிரமணிக்கண்
2 வசனக்கண்
3 புரதனக்கண்
4 பலனக்கண்
5 பிரவேசக்கண்
6 தைரகிதக்கண்
7 ஊர்த்திரக்கண்
8 நிற்கிரமக்கண்
9 பிராகிர்தக்கண்.

ஆக ஒன்பது.

ஊர்த்திர மெனும் பாலே,திரவூர்த்என்று, பாட்டெதுகை மோனை தழுவி நிற்கிறது.

புருவச் சேட்டை.

1 உக்கேபனம்
2 புருடி
3 குஞ்சிதம்
5 பாதனம்
5 சதுரம்
6 ரேசிதம்
7 நைகூர்ச்சிதம்

ஆக ஏழு.

புட்சேட்டை.

1 நிமிட்டம்
2 உன்மட்டம்
3 பிரசாரிதம்
4 சமம்
5 விதற்கிதம்
6 அஞ்சிதம்
7 புரிதம்
8 பிரகிருதம்
9 விதாடிதம்.

ஆக ஒன்பது.

இவ்விதமாகக் கண்களை யுருட்டியுஞ் சிமிட்டியும் புருவத்தை நெரித்துங் காட்டினார் பரமசிவம். ஆய்ந்த பரத வல்லர் இன்னும் விரித்துரைப்பார்கள்.

நடத்தில் நிற்றநிலை ஆறு.

1 வைநவம்
2 சம நிலை
3 பைசாச நிலை
4 ஆலிட நிலை
5 மண்டலி
6 பிரத்தியாலிட

(வருமாறு.)

1 வைநவம்
2 சம நிலை
இரண்டு பாதத்தையும் சரியாய் நிருத்துவது.

3 பைசாசம்
ஒருகாலூன்றி வொருகான் முடக்குவது.

4 மண்டலம்
இருகாலு மண்டலித்திருப்பது.

5 ஆலிடம்
வலக்கான்மண்டலித்திடக்கான் முன்வைப்பது.

6 பிரத்தியாலிட
வலக்கால் முன்வைத்து இடக்கால் மண்டலிப்பது.

ஆறு நிலையாம்.

தேசி விதி, விதானம் என்பது.

1 கரணம்-என்பது (சமநிலையில்-வலதுகால் முன்வைத்து இடதுகால் பின்வைத்து வலமிடம் முறுவதாம்).
2 கரணம்-என்பது சரியாகநின்றுஒருகாலைத்துடையினிற்சேர்ப்பதாம்.
3 ஆலிடம்-மண்டல நிலையிற் றுடையின்பேரில் ஒருகாலொட்டித் திரும்புவதாம்.
4 இலகித்து-சதுரமண்டலமாகவிருந்து இடையசைப்பதாம்.
5 கடிசாரி-இருகாலையுஞ் சமமாகநிறுத்திக் கடிதடமசைப்பதாம்.
6 கழியகால்-இரண்டு கால்களையுங் கட்டித்திரும்பிமுன் ஹான்றுவதாம்.
7 கட்டுப்புரியம்-ஒருகாலை முன்தட்டி ஒருகாலைப்பின்குத்திப் பின்னூ வதாம்.
8 உள்ளாழம்-ஒருகாலையூன்றிஒருகாலைச் சுற்றி யொட்டி யிறக்குவதாம்.
9 கடிதலம்-மண்டலியாக இடதுபாரிசம் வலதுகாலை யூன்றி இடது காலை முன்காலுடன்கட்டி வீசுதலாம். (தாம்
10 குஞ்சிப்பு-ஒருகாலையூன்றி ஒருகாற்பெருவிரலை நிலத்திலூன்றுவ
11 ஊர்தல்-இரண்டு கால்களையும் தட்டி முன்னே போயும் பின்னால் வந்து பார்சங்களில் வருவதாம்.
12 நடுக்கல்-இரண்டு கால்களையுங கததிரியாக நிறுத்தி யசைப்பதாம்.
13 போக்கல்-ஒருகாலை நெளிவாக யிடையிலே குத்தி முன்காலை முன்
14 அப்புதல். (தட்டி வீசுவது.
15 வீசுதல்-ஒருகாலை நாலுபக்கமுந் தட்டிக்கட்டி வீசுவதாம்.
16 கம்பித்தல் - கால்களிரண்டையும் ஒன்றாய்ச்சேர்த்தி பாரிசத்திற்
17 வாங்குதல். (கட்டுவதாம்.
18 அனுக்கல்-இரண்டு படத்தையு மூன்றி குதிக்காலைதூக்கி யனுக்குவ தாம்.
19 இடுபுகுதல்.
20 குன்றுதல்.
21 நெறித்தல்.
22 மாறுகால் விதானம்.
23 அச்சாரி.
24 சரிவாங்கல்

வடுகு.

1 சுத்துதல்
2 ஒட்டுதல்
3 கட்டுதல்
4 வெட்டுதல்
5 நீக்கல்
6 முருக்கல்
7 அனுக்குதல்
8 வீசல்
9 போக்குதல்
10 குடுப்புதல்
11 கத்தரிக்கால்.

அக்ஷரம்.	மாத்திரை	அங்கம்	அங்கப்பெயர்கள்	உற்பத்தி
க	ச		மூன்றாம்பிறை	ஈசானமுகம்
உ	இ		பூர்ணமதி	தற்புருடமுகம்
ச	க		அம்பு	அகோரமுகம்
அ	உ		வில்லு	வாமமுகம்
கஉ	ரு		சர்ப்பம்	சத்தியோசாத
கசா	ச		அன்னபதம்	ஊர்த்துவமுகம்

சிங்களம்.

1 மெய்சாய்த்தல்
2 இடைநெளிதல்
3 குவித்தல்
4 சுழித்தல்
5 கைதூக்கல்
6 அசைத்தல்
7 படுத்தல்
8 அணைத்தல்.

ருஷிகள்	தேவதை.	ஜாதி.	வர்ணம்.
நந்திம்கசசுரன்	வருணன்	வைசியன்	வெண்ணிறம்
பிரமன்	பிரமன்	பிராமணன்	சிகப்பு நிறம்
துர்க்கை	இந்திரன்	க்ஷத்திரியன்	பொன்னிறம்
நாரதர்	சந்திரன்	சூத்திரன்	கருப்புநிறம்
வாணசூரன்	அம்பிகை	சூரியகுலம்	பச்சைநிறம்
பானுகம்பன்	திரிமூர்த்தி	சங்கரஜாதி	பலநிறம்

'தேசி-நடந்தாடல்.

சட்காலம்	காலத்தின பெயர்.	மாத்திரை
1	தககணம்	8
2	வார்த்திகம்	4
3	சித்திரம்	2
4	சித்திரதரம்	1
5	அர்த்தசித்திரம்	இ
6	அதிசித்திரம்	வ

வடுகு-நின்றவிடத்திலாடல்

சிங்களம்-சுழன்றாடல்.

சட்கால நிலை மாறாமல் உமையவள் கண்களிக்க அகமார்க்கத் தாண்டவ மாடினார்.

மயூர தாண்டவ மான்மியம்.

கலி நிலைத்துறை

திருமுக மலர்ந்தநாதர் திருநட னங்கள் செய்தே
ஒருமுகமி ருபாலாமென் றுமைக கருடந்து நாக
கிரிமுக மெழுந்தகதை கிளத்தினன் பொளிப்பாங்க காட்டு
கரிமுகாக்கி னையாளுமை கரணனே கருத்தென் றோது. 1

திங்கட் செஞ்சடைத் தேசிகன் சிகரவெற் படியிற்
றங்கி யாண்டலைக் கொடியனைச் சிறப்பித்த தகைமை
பங்கி தங்களை யியற்றுவா யெனநமசி இறைஞ்சப்
பொங்கு மாதவப் பூசுரன் புலந்துறை தொடுத்தான். 2

புட்பவனச் சிறப்பு.

கொங்க ணுட்டினிற் கொங்கு காட்டிடும் மைந்தருக்கத்
டங்கு கோட்டத்துட் டங்கொரு கோட்டைங் கரமா
தங்க நாட்டத்துக் கின்புற நாட்டிய மயிலிற்
றங்கி நாட்டாமுன் காட்டிய தண்டலை வடகீழ்த். 3

திசையி லம்மலைச் சாரலிற் செண்பகம் புன்னை
நசையி லேமபாலை நறுங்குரா மாதவி மகிழ
மிசைய சோகு பாதிரி மராமரமின் மகளீக
கிசைய வேதச மெழிற் கொன்றை கூவிளந் தானே. 4

இதத்தி யதத்தி மாதுளை யெலுமிச்சை கொளுமிச்சை
தொத்து முத்துள தொரட்டி யாலரசு வேம்பொடுநா
ரத்தை திந்திக காஞ்சோரி கருநொச்சி யருநெல்லி
சித்தற கொத்தபூந் தருச்சில வடர்ந்துதேன் றுளிக்கும். 5

குளிருங் கொன்மலைத் தண்டலை யாவினம் வளர்புற
றுளிருங் கமடையுந் தின்றதாற சுதைமிகுந் தனகண்
குளியுங் குட்டியு மூட்டியுங் குறைபடா தொழுகி
வளியுந் தேனொடு மழைகலந் தறைவனம் பாயந்த. 6

கோங்கு மாகமு மாகத்திற் பாய்ந்துமே குலவுந்
தேங்கு வாழையின் வாழையும் பாய்ந்தடந் திரியும்
வேங்கை மாதவி மாதவி பாய்ந்து மேன்விரிந்து
வோங்கு மாவன மாவனம் பாய்ந்து கண்ணுறங்கும். 7

மடவை மேலொரு மடவை பாய்ந்தம் மடையடையுங்
கொடியின் மேலொரு கொடியிருந் தக்குல மழைக்குந்
துடியின் கீழிரு துடியிடை யெங்கினுந் துலங்கும்
கடியின் மேற்கடி பொருந்தி யெங்கினுங் கடிகாவே. 8

சந்தனத் தருவீதி னிற்சதத முஞ்சந் தமகவல்
சந்தமக் கிளிகள் சமமெடுத் தோத சந்திரகால்
கொந்துணுட் செறிந்து சுழரிடு மோதையிற் கலரா
நந்தனன் குழலென விசைகுயில் பயில்நா கத்தே. 9

செண்பகத் தருவடி யினிற்சே வலகண் மத்தளம் போற்
பண்புடைசிற கடித்திடப் பாவைபோ லனங்கண்
மண்பு கழ்த்திட தடமிட மலர்த்தலை யசைப்ப
விண்பு கழ்த்திட விளங்கனி தளங்கொட்டும் வெறிகாண். 10

காக முற்றவனக் கனிகளை மந்திகைப் பரித்து
போக முற்றதங் குரங்கினுக் களித்து முத்திட்டு
வேகி யககலி னுச்சிவா ளெழிற்றரு வசைத்து
நாக மெடடித்தன் னுகத்தைச சார்ந்து நாகம். 11

ஆடன் மாவன வளத்தினை யளப்பதற் கெளிதோ
சேட னுவிருபத்து நாரினுஞ் செப்ப முடியா
தோடி னன்பொனி நதிகடந் தக்குணக் கொருபாற்
சேட னுனனு வறைகுவன் சிகண்டிமா நடனம். 12

கைலாய நாதர் காரணம்.

மாயன் மாலை வனத்தவ வன்னையை வணங்கிச்
சாயன் மஞ்சையிற் சையிலத்தை வலம்வந்து வடகீழ்த்
தோயுந் தேமலர் வனத்தினைக் கண்டு சுப்ரமண்யந்
தாயி சானவி தனைநினைந் திடாங்கு சனித்தாள். 13

கஙகை யாடியோர் கைக்கம லாலய மெனவே
யக்கை சேர்த்தியோர் கையினை லிஙகமா யமர்த்தி
யைங்க ரக்கர மஞ்சையு மாறென மதித்தார்
கங்கை சூடிய கையிலை நாதனு மவனென்றே. 14

வான நாடரு முனிவரெண் டிசையர் மாலயனுங
கான நாடிய கடவுளின் மகிமைகண் டுதித்து
தான நாடிங்கு தகுகுக வெனவாட நடுவ
ஞான நாமென மயின்மிசை நசையொடு நட்டனம். 15

ஆடினாரிரு சிலைகளை யுயிரங்களு சச்ச
பீட மோர்சிலை யிருகளை பிறையொடு சாச
பீடமா முயிர்களை சிலைகளைசிலை பின்னுங
கூட வோருயிர் சற்பித புத்திரங் குறியே. 16

சமபத் துவேட்ட முக்குரு விருபாலுயிர சாரும
நம்பு முசசிலை யுற்கடித மஞசுதாள நவிலும
இன்ப மாய்த்தேசி வடுகு சிங்களநடை யெழிலாய்
நிம்ப மாலியன் மயூர நின் றுடிடு நிலையாறே. 17

சந்தக் கலிவிருத்தம்.

கண்டுமேநவ விரவாகுவு கஞசதாளமெ டுத்துகை
கொண்டுதாகிட தத்திதோமென தம்பிமத்தளங கொடடிட
வண்டபூமிக ளதிரநாகமு மாதிசேடனெ ழுத்திட
பண்டு யாழொரு தமபிதாககிலை பாடி ஞொஞெரு விரனே. 18

வேணுநன் சுர பத்துகஞ்சரி வேதசுதிகு ழன்முக
வினையோடிசை பண்ணெழுப்பினா ரிராநாதமுங் குடையென
தானுமோஙகிடங குற்றவகரி னைதங்கியங்குமு நின்றிட
தானுவாகநின் றுடிஞர் மயில் சாயமாதாக ஞானவே. 19

சத்திவேண்மணி தாளநார தண்டைமத்தள மற்றது
மொத்துநீண்முனை நாதநாடிட யோகியாடிடு நாதனை

சுத்திவானவர் துத்திசெய்துத குந்தகுந்தகு தோமென
நிர்த்தஞானம யூரனே ஜெய வென்று கொண்டுநின் முடினார். 20

பாடினார்சிலர் சூடினார்சிலர் பன்மணித்தொடர் வாகனை
நாடினார்சில ராடுதாண்முடி சூடினார்சிலர் நன்மலர்த்
தோடுளைலடி சூடினார்சிலா கோடும்பென லூதினார்
மாடைவீசனம வீசினார்சில ராடவர்மரை வட்டமே. 21

கும்பயோனொடெழு முனிவருஞ்சிவ கோலமேசுப பிருமமே
நம்பினேன்குரு வென்னவெண்டிசை நாதாவிரு துக்குடை
யுமபாநாடுறை யும்படிபிடித தோம்சதாசிவ சண்முகத்
தம்பிரானுனை யன்றவேறிலை யாண்டவாசெய தாண்டவா. 22

என்றுதேவர்க ளேத்தவேயரு ளாடியாகளு மாடமுன்
னின்றுவேங்குக கந்தகந்தக டமபமாலிக நிபுணனே
குன்றுகுன்றுக டஙகிடத்தக தண்டுகொண்டகைக் கோலமா
நின்று நின்று கூத் தாடினாரிரு கண்களிக்குமிங் காடினார். 23

சாமிநாதச பாசுவென்றுகை தட்டினார்லய காலமாப்
பூமயூரமெ மூந்துதோகைகட பூத்ததோாகொடி பானென
தாமமாயிற கைவிரித்தெதி சமசுரோதகோ புசசமா
பூமிமேலடி தாக்கியுந்தகை யாதுமாடின பொறிகழல. 24

தண்டைகிண்கிணி கிண்கிணெனன சதஙகை கலகலீரென
கொண்டைமுக்கணி னின்றுபன்மணி கூழைதுளத ளாவென
மண்டலாகர மாகவாடிடு வன்மயிற்கினி நேசமாங [னார்.
கொண்டல பொன்மழை தூரவண்டர்கள் பூவைபூமழை தூரி

விண்டு கண்டும தஙகைபாலனே வேலனேயென வாழ்த்திட
முண்டகாசினி தண்டமிழ்மணி கண்டுதிட்டிமுன் சுற்றிட
சாண்டனம்புலி கண்டுவிண்பிர தசசணம்வர விறைதொழு
துண்டநிக்கிரக சண்டவேறபடை கொண்டகுமர தூரந்தரன். 26

மகதிநாதர் பிரகதிதும்புரு வாணிகசசள கின்னரி
சகளவல்லகி கீஸ்திருசசிசா ரஙகபஞ்சிகை சரவீணை

சுகவராளிகு லாக்ஷருத்ரிகை கூர்மியனும துகாந்தரி
பகர்களாவதி கோஷசித்ரிகை யென்னுமியாழ் பரிவாதினி. 27

மீட்டினுருகு வேதபைரவி பூபாளமு மாணுமலை
யாட்டிதேவகி ரியைமேகவி ரிஞ்சியாங்குறிஞ் சீசிஇ
ராட்டிவேளவ ளிமல்ஹரி பௌளியென்றமை ராகமுங்
காட்டிதைத்ரிய மறைசிராகமம் படமஞ்சரி கணவரும். 28

இந்தோளபல் லதிசவேரியுந் தேசிதோடியபி லலிதைபெண்
சந்தநீடிய சாமவேதவ சந்தமாளவி யாண்மதி
கந்தராமகி ரிவராளினிகை சிகமுகுண் டக்கிரி
பந்தமாகிய கூர்ச்சரியுநா ராயணியுசுபமாதரே. 29

அதர்வணமறை யதனிர்பங்கள நாட்டைராகமு மாணுமா
மதனிலாடனி யாசியாங்குகாம் போதிகௌளிதே சாச்சரி
யுதவிகாந்தரி சாரங்கமென் றேதுராகமெண் ணுலையர்ப்
புதமவெண்டிசை யுருசுமுனரம் புக்கருவியிற் காட்டினர். 30

மார்கண்டேச்சுர மான்மியம்.

கலி விருத்தம்

கையிலை நாதனைக் கையா லமர்த்திமுன்
மயிலு நாதனு மாடிய மான்மியம்
பயிலி னேன்பனி யோதிமத் தின்னமென்
குயிலு மென்னக் குறித்தன ரானனம். 31

கால னுடா துதைத்தவ ரோதிகண்
கோல நீடி வளந்ததென் கூறுவீர்
சீல நீடுமறைத் தேசிக னேயென
ஞால மீது பணிந்தர் நசையொடு. 32

பணிந்த சைவப் பயிர்க்கு மழையெனத்
துணிந்த மாதவர் சொற்றத் துதித்தன
ரணிந்த கங்கை மதிகச்சி யாளரை
யணைந்த மங்கை மலரடி யன்பொடு, 33

ஆகம நம்பிகே ளாய்ந்த மிர்கண்ட
பாகம மர்ந்த மணாட்டியைப் பார்த்து
சோகம டைந்தர் சுமங்கலி நோக்கி
யேகம னத்தரே யீ இதென் காரணம். 34

கேட்கு மாதே கிளற்றுவ னுண்மகு
வாட்கை யிலார்கு வானவா நாடிலை
நாட்க டோயு மலைமுனி நாதனும்
வாட்கை யிலாத மயங்கி நின்றரே. 35

மயங்கி நின்ற மலைமுனி காதையை
யியம்பு மென்ன விருகரங் கூப்பினாள்
பயந்து கேட்ட மனையாட்டி பண்புற
நயந்து சொற்றத் தொடங்கினா ஞானவான். 36

அறத்திற் சிறப்புற்ற தில்லை நல்லறம
மறுத்து மாதவஞ் செய்த வகத்தியா
குறித்து வான்கிளை தொங்குந் தவக்கோல
மறைத்து மென்ன வடிபணிந் தேத்தினார். 37

தாதைதன் றாதை தாதைமூ தாதையென்
றேற்று மறியா திருடியை நோக்கித்
தாதை தன்சேய னென்றறி யாமலு
மோதத் துடங்கின ருண்மை துணிந்தே. 38

கலி நிலைத்துறை

செகத்தி லெங்கணற் குலமதிற் பிறந்து செந்தமிழா
ரிகத்தி யன்மக மனத்தையுந் தவரிடா நடாத்தி
யிகத்தி னின்றிறை யெங்களுக் களித்திடாத் துரோகி
மகுத்து வந்தவ மகுத்துவ மல்லென வறைந்தார். 39

அம்மொழி கேட்டங்க மடங்கலு நடுங்கக் கூவி
நன்மொழி யறைவீர் தாதை தாதைமூ தாதைஞாதீர்
சொன்மொழி நடப்ப னென்கோ தாற்றெனத் துதிக்க மின்னு
ரின்மொழி மாதுநீயு மெள்ளமு தளிக்க நன்றும். 40

தெளிந்த ஞானியுஞ் செய்தனை யின்றபின் சிறந்தார்
குளந்தை யின்றியாங் கொடுந்தவஞ் செய்ததாற் பயனென்
றுளந்த யங்கியே மிருகண்டர் மனைவியாட் கோதத்
தளர்ந்து மெய்சிலிர்த் தாழிகண் டாரைபோ லுதிர்த்தாள். 41

மங்கையின் றுயரையாற்றி மனமிரு பாலுமொன்றாய்க்
கங்கையுங் குழவித்திங்கள் கவிந்தசெஞ் சடையன் றன்னை
யங்கெங்கு மசையா துள்ளத் தழுத்தியஞ் செழுத்தையோதிச்
சங்கரன் கிருபை யாலோர் தனயனைப் பயின்றார் மன்றே. 42

தனயனு முத்தனாகித் தரணியிற் சிறந்த பஞ்ச
சினையணி பெற்றிலங்குஞ் சேதிமத் தலங்கண் மற்றும்
முனையணை யற்றுவஞ்சு கூளிபோர் முகமாய் நின்றம
மனுவணி சிறந்த மைந்தன் பலப்பத சாரியாமல். 43

தலங்கடன் டலைக ளெங்குந் தங்கிடுஞ் சுயம்புலிங்க
மலங்கிடுஞ் சிலம்புவெல்லா மின்புர வருச்சித் தேத்தி
நலங்கொடு கடையூர தன்னின் னருச்சனை மிடரோன் கோட்டம்
வலங்கடி மலர்க்கை சென்னி வைத்துசூ லரிவையென்ன. 44

அடியினி லடியாயிட் டங்கத்தி னின்சுமை பூவேறாக்
கொடிமுடிசி கரச்சாயற் குடபடா தொதுங்கிக் கொண்டு
படிமுகப்பி ருக்கும்பீ டத்தடியி னிறபடிந்தார் துண்டங்
கடிபுய மிருதோட் கண்ணாந் தாண்முள பணகடோய். 45

எழுந்திரு கரமுங் கூப்பி யியங்கிய காவனந்தி
குழைந்தெழு மிருகோடுற்ற குளிர்ந்த வானனத்தை நோக்கி
குழந்தையமபு லியார்வேணி கொடுஞ்சுறு புரந்தாள் வில்வக்
கொழுந்துன லர்சசித்தேத் தகொடும் விடையெண்ணுங் கா

ஆண்டொருபத் தாறென்ன வளித்தனன் வயது நாகம
பூண்டவன்மி ருகண்டர்க்கோர் புத்திர னெண்ணின் றேறு
தாண்டினதவன் பாற்சென்று சடத்துயிர் கவர்ந்தா லென்ன
தூண்டதென் றிசையையாள்வோன் றூதருங் கடையூர் கண்டார்

45-பா-4-அசேமி-நன்மைபெருமை- பானைதுதிக்கையாற் றழுவல்
46-பா-3-அடி-வாடி-வினையெச்சம் கூடுவிட்டுக் கூடுபாயுந்தொழில்
45-பா-4-வரி-தாண்மூள முழந்தாள்

நந்திபுன் முறுவலுற்று நன்முனி மகவை நோக்கித்
தந்தவெண் ணிரண்டாண்டின் றோடாயின தருமன் றூதாள்
வந்துமுன் வாயினின்று வரவுபார்த் திருக்கி றார்நீ
யந்திவண் ணனையே பூசித்தாங் கிருவகலா தென்றார். 48

சாற்றியமொழி யைக்கேட்டு தயங்கினின் றுளத்தைத் தேற்றி
தோற்றியசிவ லிங்கத்தைத் தொழுதெழுந் துள்ளே சென்று
கூற்றுவன் றூதர் வந்தார் தடுத்தெனையாட் கொள்ளென்று
போற்றினின் றர்ச்சித்தார் பூவரும்பு பத்திரங்கை கொண்டே. 49

சகத்திர நாமமோதத் தங்கிய கால தூதா
ளகத்துனுட் செந்தீஇப் பாய்ந் தாரிடா தயர்ந்து வம்மி
தகித்திடு மென்றுசென்று சண்டன்முன் மரம்போல் வீழ்ந்து
செகத்தின்கட் சிறந்ததர்ம சீலரோ செப்பக் கேண்மோ 50

தென்றிசைக்கோ வேநின்சொற் றெரித்தன்முன் கால்போற் [சென்று
கன்றிளம் பசுவாய்நின்ற கடவுளின் கோட்டம் புக்கிச
சென்றவன் வரவைநோக்கிச் சேதிம வாயன் னோராய்
நின்றிட ஞெகிழிபாய நெஞ்சுலர்ந் தோடி வந்தோம் 51

மருத்தொட ரரவுசென்னி மாலைமான் மழுவு மேந்துந்
திருக்கடை யூரனுதி செப்பிய வாண்டு சென்றுஞ்
செருக்கொடு முனிவன் சேயைச் சேதிமத்துள் வைத்தெந்தன்
றிரத்தினை யறிய வென்றோ தீயிட்டா ருங்களுக்கே. 52

அவனவனென் றியாப்பூமே லாக்கினை செய்தா லந்தச்
சிவனவ னென்னசெய்வ ரென்று சேதிமத்திற் புக்கி
பவனவன் பூசித் தாலும் பகர்ந்துயிர் பரித்துவாரா
தவனன்மே லிட்டனென்னச சாற்றினாய் தூதா வென்றே. 53

இருவிழி சிவப்பச் செந்தீப் பொரியெழ விருண்டமெய்யிற்
பரிவிய கரத்திற் றண்டம் பாடங்கொண் டேறுவேறிக்
கருவியாய்மு னிவன்சேயைக் காப்பவன் கடையூர் புக்கி
திருவிளை யாடுங் கோட்டத் தடியினிற் செறிந்துமன்னோ. 54

அந்தக னதிர்த்திப் பாட மர்ச்சிக்கு முனிவன் மீது
சிந்திடச் சினந்துலிங்கந் திறந்திட மழுமானேந்தி
யுந்திடக்கா லாலோங்கி யுதைத்தனர் காலன் சாய்ந்து
மந்திரவா யன்முன்பாய் மண்ணினு ளழுந்திக் கூவி. 55

காங்கேய முருக கந்தா கதிர்வடி வேலா வேளோய்
தாஙகொணு துயிரிக் காலந் தடுத்தெனை யாட்கொளென்று
தேங்கிநெஞ் சுலர்ந்து விம்மித் திருக்கெலா மாழிசிந்த
ஆஙகவ னுறைதயுள்ளத் தடக்கிமுன் னடுத்தா ரன்றே. 56

அறுமுகச் சிவமே ஐயையாகிய தேவயானை
நறைமலர்த் தொடைவா குற்ற நாதனே சனவியென்னுங
குறமகள் பங்காகோழிக் கொடியனே கொடியன்செய்த
குறைபொருத்தருள் வாயென்னக் குறித்தனர் சிகரக்குன்றே.57

தடந்தடந்தட முண்டேழுந்து தடக்கரை தடமொன் முற்றி
தடந்திடம்பட நின்றோங்கித் தடமிகக் கையா லிங்க
மிடந்தரும் படிகமேந்தி யெழில்வலக் கையாற் புட்பந்
தொடர்ந்தருச் சித்தா லாங்கு தோன்றுவாறீ ரெட்டாண்டே.58

துதிசெயுமா ரூர்வீதி சுதையுனக் களித்த பாசு
பதியுள மிரங்கியாங்கு பதிசெல வளிப்பா ரென்னக்
கதிரயிற் படையன் செப்பக் காஞ்சிரங்கூப் பியந்தோ
வுதையினி லயர்ந்தன்செல் லவுறுதி குன்றிற்றே னைய்யே. 59

என்றதுகேட் டீசெவ்வே ளைறும்பி யானனனை யேத்து
மென்றுகோட் டத்திற்புக்க வேமனு மோகை கொண்டு
நன்றுகோ டொன்றிரண்டு நற்பத மூன்று கண்ணூர்
குன்றுதோ ளைந்துகையோர் குஞ்சர வதனு போற்றி. 60

மூவர்க்குமு தலாபோற்றி முத்திக்கு வித்தே போற்றி
தேவர்க்குத் தேவேபோற் றிதெளிமறைப் பொருளேபோற்றி
சாவுக்கு மணத்தினுக்குஞ் சார்ந்துமுன் னிற்பாய போற்றி
பூவுக்குளாழ்ந் தேனுளி வாகனு போற்றியென்ன. 61

சாமரச் செல்வி ரண்டிற் றடையராக் கேட்டெழுந்து
தாமரைப் பதம்பூமேவத் தனியனு வோடிவந்து
வேமனின் முறையா திம்மண் ணிருப்பதென் றிசையைவிட்டு
தாமதஞ் செய்யா தென்முன் சாற்றுவா யென்று மாற்ற. 62

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மொழிந்த மாமுக னடிமலர் முடியுற
நெறியொடு தொழு தேழ்ந்து
விழுந்த வாறுக ளனைத்தையு முறைமுறை
விரிக்குவ னதுகேண்மீர்
குழந்தை மாமுனி வயதுக ளரவுயிர
கொடுவரு முனமேந்த
லெழுந்து காலினி லுதைத் தனாடபடி
யழுந்தின னென வெதிர்கூர்ந்தான். 1

பிறந்த மானிட ருடலுயிர் பிறித்திட
வெனக்கருட் பரந்தாமே
மறந்த ரோபழி சுமப்பாக ளெவரவர்
மனததினு நிறைந்தானே
சிறந்த கோவறம புறந்திறந் தரந்தெரிந்

தெழிந்த காலினர்க் குரைப்பவ ரெவரவ
ரெனக்கரு டருந்தேவே. 2

தளர்ந்து வாணிய வியமனை யமலேமு
னவனெடுத் தயர்நீக்கி
வளர்ந்து வானுரை சிரகிரி யெழுவொரு
விழிபடர் துடன்மாற்றி
துளைந்து பூமியைப் படர்ந்திதொண் டுறுவெடுத்
தருந்தவ முறையாற்ற
குளிர்ந்து கோதிலர் கடையுதைத் தவர்முடி
தருவரே தணிகூற்றும். 3

கலி விருத்தம்.

கூற்று வென்னக் குளிர்ந்த மொருபகர்ந்
தாற்று வித்தவல் லைஙகரத் தெய்வமே
தோற்ற வில்லை யொருமனுச சூத்திரஞ்
சாற்றினேன் விடை தந்தருள் வேண்டுமே. 1

தூங்க மாமுக சுந்தர ரூபவென்
றீங்கை யாற்றிய தேவசி காமணி
யீஙகு மாற்றின தேக மெழுந்துமு
ஞஙகு தோற்றுமோ யானதற் கென்செய்கேன். 2

அன்றி யாக்கை யகற்றெனச் செப்பினீர்
குன்று கிட்டக் குடையுமோ விவ்வுயிர்
கன்று விட்ட பசுப்போற் கலஙகிட
தென்றிக்க சிறந்தென் ஞகட் புக்கென்றே. 3

செப்பிய தூஙகமே செஙகழு வாஙகிக்
கொத்தி யேம னுடலைக் குறித்திடம்
விட்டு நோக்கி விரிந்தெழு கற்புடை
பக்கி காற்படப் பாரையப் பாயின. 4

அப்பின் மூழ்கிக் கழுகுரு வற்றவர்
தற்சொ ரூபமாய்த் தாணு நடுவினிற்
புக்கிவந்த புகழைப் பெருக்கிடா
திட்டர் மாமாங்க மென்ற பெயர்க்கதே. 5

பெருக்கா தென்ற் பெருமையை யெந்தையே
சுருக்க மாயுரை யென்னத் தொழுதிடக
குருக்க ளேசைவ கூறிடக் கேண்மியென்
றருடக டவுளைச் சிந்தைவைத் தாற்றுவாம். 6

தந்துரை கேளஙக மேமன் சடமுமாம்
முந்திநின் றம்மா மூரி யதன்பின்னுய்
வந்த மாவே வதன மவரிட
சிந்தை யின்படி செப்பின தொப்புமே, 7

ஒப்பு மென்ன மொழிந்தனின் னோதக்கேண்
டொப்பை விட்டேம னாவியாகின் றொப்பை
யப்பி யாங்கம் புவியைக் குடைந்துவான்
வெற்பின் றென்புடை விம்ப மூரம்பிலே. 8

நடுவி லேழ்ந்திட நாரமு மேழ்ந்தவத்
தடமுண் மூழ்கித்தன் சடலத்துட் புக்காமற்
புடையி லோங்கிய பூதரச் சாரலி
னடுவி னிற்கரு ணாக வதனன் முன். 9

ஓடி னன்புகழ் பாடின னோகையோ
டாடி னனெடுத் தாடின னன்பொடு
சூடி நன்பதத் தூமல ரைத்தலை
வாடி டாதேமன் மதகழி ரானை. 10

கைய மர்த்திக் கடவுட்கனிந் தேமா
மெய்ய டுத்துப் புகுவென விம்மியான்
செய்யு நற்றவ மாகுரு சேடுந்தன்
மெய்யெ டுத்துச்துச சுமப்ப விருப்பமே. 11

அதுவு மன்றிப் பழிக்குரு யான்கஞ்ச
மதுவை யுண்டரி மாவனஞ் சென்றிட
வதனுண் ணின்றரி யப்பழி யேற்றற்போற்
பதியி லோதும் பகவ னிருக்கவே. 12

எய்தவ னின்றிட வெய்தம்பு வென்செயு
ஞமதவழ் கண்டர் மலரடி பட்டதோ
லுய்தி யானனுன் னாகுருவா னேனான்
செய்தவ முங்கை சேர்ந்ததென் றேமனே. 13

நோக்கி நடுவன் றருமனென் றெந்நூலும்
பூக்குநற்றிரி புவனத்திலுங் கீர்த்தி
யாக்கஞ் சிறந்த செங்கோலை யகற்று
தேக்க மகற்றி யெதிர்சட மென்றார், 14

சொன்ன வாக்கைத் துறந்தெரி யாதேமன்
துன்னி யூக்கைபுட் சென்று துலங்க
வன்னி யேற்றி மகிழ்ந்த தனுண்ண னின்று
சென்னி மீதிரு செங்கையைக் கூப்பியே. 15

மாதங்க வானனத் தானை வழித்தி
மாதங்க வானனத் தானவழி கணு
மாதங்க வான னலையுண் மதித்து
மாதங்க வானன லைமலர் போல. 16

சேதிமத்தி யினிற்கச் செங்கோ லேமன்
சேதி மத்தி யினிற்குஞ் செங்கோமுனி
சேதி மத்தினிச் செப்பக்கே ளம்மலைச்
சேதி மத்திற் சிறந்த குருக்களே. 17

மதனை யெரித்த மாற்கண்ட ரேமனுன்
மதனை யுதைத்து மாற்கண்ட னென்னும்
மதனை யளித்து மாற்கண்ட ராயுளு
மதனை யளித்த மாற்கண்டறி யாதவோன். 18

கோமக வான்ம வதைசெய் கொடியோர்
கோமக வான்பதி யிற்குடி கொண்டார்
கோமக ளும்மற மங்கையுங் கூடிக்
கோமகட்கோமா னிடமுறை யிட்டார். 19

சடமடைந் தாவியைத் தண்டிப் போரிலே
சடமடைந்தமெய் தாண்டிச் சிறக்கிலே
சடமடைந்தபூ தாங்க முடியிலே
சடைமடைந்தையைத் தாங்கிய சம்புவே. 20

மாவெட்டு நீங்காத மனத்தனும் வந்தான்
மாவெட்டு நீங்கா மக்க ளுயர்ந்து
மாவெட்டுந் தாங்க மருண்டயர்ந் தென்ன
மாவெட்டித் தோலுரித் தோனடி மாற்ற. 21

அறவோர் வழியை யகற்றிப் புவியில்
அறவோ ரரச னெறியினை யோதி
அறவோர் தவத்தை யுழித்து முவர்பெண்
அறவோர்க் களித்தர் செங்கோல தில்லாதே. 22

ஏம மிட்டவ ரீங்கு சிறப்பிலை
ஏம மிட்டவ ரீங்கங்கு மோங்கிட
ஏம முற்றன ரீசனே செங்கோலார்
ஏழு மற்ற விப்படியி னிலன்றே. 23

புரந்தரன் கண்டருட் புங்கவன் கோவிற்
புரந்தரன் கண்டேஉட் புக்கி வணங்குப்
புரந்தரங் கண்டெரி யிட்ட புத்தேளென்
புரந்தரங் கொண்டார் பூமக்க ளென்றேத. 24

அம்முறை கேட்டா னுள்ளங் கனிந்து
தம்மின முற்ற தழற்சியி னாலே
மும்மத முற்ற களிரனைக் கூவி
யம்முற லிக்கரி யிப்பயென் றதர்த்த. 25

முக்கண னெழுந்து முன்னின்று வணங்கி
யப்பனி யெந்தா யந்தக னீங்கிலை
சொற்றணி மேரிற் றுலுங்கு முடியெனு
மட்டணி மாட்சிஇ மன்னுஞ் சிரகிரி. 26

எழுசீர்கழிநெடிலாசிரிய விருத்தம்.

தென்புடைவிம்ப முரம்ப நடுவிற்
செந்தணற் கொழுந்து விட்டெரித்து
துன்படையாமல தனடு நின்று
சோமனீ ரொளிபுரை லிங்க
மின்பொடு வாமக் கரத்தினிற் றுங்கி
யிமன்றவஞ் செய்கிறா னென்ன
வன்பொடு தானு வனத்தினு நிறைந்த
வறுமுக னுரைத்தனென் றறைந்தார்.

உரைத்திடு மகவை யிருகையாற் றழுவி
யுமையவ டிருமுக நோக்கி
கருத்தெணும் வேறு யிளையசே யையுங்கை
காட்டின னெனவேபுன் னகைத்து
மருத்தொடர் தடவு முளங்கனிந் தீசன்
மறலியின் றவத்தடங் குறித்தே
மருத்துவ னயன்மான் மங்கையர் கணங்கள்
வானர்க்கண் முனிபுடை சூழ. 2

விடையினி லாரோ கணித்துடி சிலம்ப
விருதுகள் சிவகண மெடுத்துப்
புடைதனி வாணி யெனவிரு கதிர்கள்
புனிதனோர் பரவிடா தோங்கி
கடுநடை வேகம பசுங்கிளா பூட்டிக்
கவிரொரு திகிரி தேருரையத்
தடமட லோடு பரித்துச சூர்ப்படையைத்
தடிந்த வன்கையாற் பிடித்து. 3

அருகினில் வருக வமரர்க டுதிக்க
வந்தர துந்துமி முழக்காற்
றிரிபுவ னங்கள் செவிடுற வையன்
சிரிகிரிக் கேகமுன் னேகிக்
கரிமுகன் முருகர்க் கறைந்திட வேளுங்
கதிர்குந்தப் படையரைக் கூவி
தருமனீங் கியற்றுந் தவத்தினின் மாட்சி
தானென மனத்தினின் மதித்து. 4

தந்தைதாய் வரவைத் தனுசர்கட் கோதித்
தங்குகோட் டந்தோ ரணம்பூ
பந்திபந் தியதாய்த் தடங்களுற் றிசையுஞ்
சமைத்திட மையனுக் குரைசொன்

முந்திவா னடுத்து மயனொடு குயிற்றோர்
முகூர்த்தத்தி லாற்றென மொழியச்
சிந்தையுங் கனிந்து மனுசத்தி திடத்தாற்
சிறப்பித்தான் சிவங்களிப் புறவே. 5

மாற்கொண்ட வூர்தி யயனண்டர் சூழ
வால்விடை யினிலுமை யுடனே
மற்கண்டர் சிலம்பின் புடையினில் வருக
மாட்சியைக் கண்டருண் முருகன்
காற்கொண்டு வலிய சமர்புரி பறவைக்
கொடியிடக் கரத்தினும் வலக்கை
வேற்கொண்டு வீரர் புடையினிற் சூழ
விமலனை யெதிர்கொடு பணிந்தார். 6

பணிந்திடுங் குளவி தனையிரு கையாற்
பண்புறத் தழுவிமுன் னமர்த்தி
குணந்தளர்ந் திடுமார்க் கணிகளும் பூட்டிக்
கோமக னுக்குக ணிணைகண்
மணந்தரு மலர்த்தே னுண்டு ரீங்கார
விசைசெவி படரவாழ் வலர்கட்
பணிந்திடுஞ் சிரமபோற் கதழ்நெற் குலைகட்
பணிந்தன விறைவனைக் கண்டு. 7

கருப்பு வில்வேழு மருப்பூ கள்ளாரு
மலைப்பூ வெலாம்வனப் பூவாய்
நெருக்கி வன்னரி விறுக்கி மினார்க
ணிமைக்குமு னுளர்கை யளிக்க
எருத்தினி லேறி யுருத்திரர் வாரு
மிடத்தினிட் டோரண மமைத்து
இருட்டணை மாற விரத்தின மாலை
யிடைக்கிடை சூழத்தொங் கிட்டார். 8

பரவையிற் சிறந்த மகரங்கட் படர்ந்த
பிரவாள முத்தையுங் கவ்வி
பரவிய தென்னத் தலைநிமிர்ந் திசையாழ்
முனிவரு மியாவரும் பார்க்க
இரவியி லணிந்த தோரணங் கடந்து
வருகுமு னேமனே ருற்றுப்
பரிவுடனிலிங்கம் பாறையி லமர்த்திப்
பரமனைக் கண்டடி பணிந்தே. 9

எழுந்துடல் விதிர்ப்ப விருவிழி யாழி
யருவிபோல் வழிந்திட விம்மி
மழுந்துடி யுழைக்கை வயங்கிட விடையில்
வாமத்தி லுமையவள் விளங்க
வெழுந்தெனை யாள வந்தருட் கடலே
யெந்தையே இந்து சானவியுந்
தழைந்தசெஞ் சடையா தயாளமெய்ப்பொருளே
சம்புவே சங்கரா போற்றி. 10

காமனையெரித்த கடுந்தணற் கண்ணா
கருணை செயிருகண் முக்கண்ணா
கோமனை முகப்பென் னுதைத்தொரு
காலா குளிர்ந்தெனை யாளிரு காலா
சோமனைப் பிறித்தோர் கலையணி சடையா
சோடச கலைமுகச் சடையா
ஈமனை நடித்த விதமினென் றறியே
னீசநின் செயலையு மறியேன். 11

ஆக்கலு மழித்தற் படைத்தலுங் காத்த
லனைத்தினும் வலசித்தனேநின்
சேர்க்கை யிலாத செந்துமெய் யுண்டோ
சிவனையை யிரண்டொரு பாலாய்

நீக்கமிலாதைம் புல்பொறிக் கரசே
நிமலனே யான்செய்த பிழையை
தூக்கிடா தடுத்த குணநிதிப் பொருளே
தொழும்பனுக் கருடரும் பொருளே. 12

தலைத்தொடர் வாகா மணிப்பணை நாகா
பரணனே பரமனே யேம
மலைத்தடி யாகவளைத்தவன் கரனே
வையனே மெய்யனே யடிய
ருலைத்தடஞ்ஞைகை யொடுதடுத்தாளு
முத்தம குணநிதியே என்
னிலைத்தட மாகவந்த பேரின்ப
நிமலனென் றேத்திடுங் காலை. 13

அரிமுதன் மிருக மியாவுங்கேட்
டயர வம்மலை யாவுங்கண் கதற
அரிமுடி சிறந்த பக்கிகட்பாவை
யனைத்துங் கலுடியினிற்றேங்க
அரிமுடி தனில்வாழ் கட்செவி யிலலா
வகறிணை களுஞ்சில தழுங்க
அரிமுடி சிவன்றுட் பணிந்தெழுந்
தழுகு மாடலைக் கண்டதா லெமமா. 14

எரிமற வியைசசூழ்ந் தெழுந்துதன் குணமற்
றிந்துதண் குணந்தர தென்னச்
சுரருற வருக்கோ திடமதி யாருஞ்
சூடுவோன் றிருவடி தாக்கு
முருவுற லணலம் பணிதந்த மாட்சி
யுரைத்திட மாலய னுற்று
தரையிறை நடுவன்றருமனென் றிடும் பேர்
தருந்தகு மென்மொழி கேட்டு. 15

கதைத்திடு கிளவி செவிக்கின்ப
முறமாற் கண்டரின் கழலினி லேழ
றுற்பட வுடலுக் கின்பமா யபையாத்
தங்கொடுத் தெழுவென நொடித்து
கத்திடும் பதும கரத்தி னீண்மகுடம்
பற்றியே மறலிகொன் சிரத்திற்
பதித்தினிச் செங்கோற் கடவுளென்
றுரைத்துன் பதிபடர் தியென வப்போது. 16

ஆக்கைக்கா வியைச்சேர்த் ததுக்குழூ
ணதுதே டிடச்செய்த தேவனேயந்த
சேர்க்கைக்கா ண்டிதுவென றேயுலகிட்ட
சித்தனீ ரிருக்கவே யென்னை
சாக்கைக்கா வைத்த ரென்றறி யாமற்
சகலருமேசிட வுயிரை
நீக்கற்கோ முடியை சூட்டி நீ ரென்ன
நிமலனும் புன்னகை புரிந்தே. 17

இயமநீ யம்பெய்தவ னெனன்
றெண்ணுவா ரென்னடியார்க
ளாது மேலின்பு வைத்தரோ வறிவா
ரவனியிற் கோடியி லொருவர்
அயா மாம் பின்பு வென்னடி சார்வா
ரறிவிலா ரேசலா லென்ன
நியமமே யன்போ டேத்தின தாலின்
னிலம்வந்த னென்னவு மறைவார். 18

கலிநிலைத்துறை.

அறுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்.

இன்னிலஞ் சத்தி கூரா யெழுந்த சென்னிமலை யாகும்
வன்னியா ருருனைக் குன்றாய் வளர்ந்தவ னேனே யாகும்

பொன்னுல கோர்க ளின்னற் பூதர முமையா ளென்பர்
இன்னுல கறியார் சென்னி மலையென்றே இசைப்பார் கூற்று. 1

உர்த்திர வமிசத் தோன்றுன் றுமக்களித் ததனுன் மௌலி
பெத்தனை யென்கை யாரப் பிரமன்மால் தேவர் நோக்க
சத்தியங் கிரியிற் சார்ந்து தவஞ்செய மொழிந்த பிர்மஞ்
சுத்தனைச் சொல்லா நாத வித்துமாச் சொலித்த தம்மா. 2

ஒருவனுக் கொருவ னுலு மோதிடு நோயி னுலுங்
கருவி யுப்புத் தீயா லுங் கடுவிடந் தன்கை யாலு
மருவிய யாக்கை யாவி மாறித்தென் றுலகோர் மாற்ற
வருளினே னுன்பேர் தூற்று ரந்தகா பதிசெல் லென்றே. 3

மாற்றியுங் கடையூ ருந்தன் மகுடத்தைக் காலாற் றட்டி
தோற்றிய சிகர மேரிற் சுடர்முடி கையாற் சூட்டி
கூற்றநீ கொண்ட தாலிக் குவட்டெம கூடமேன்றே
சாற்றினே ஞேர் நாமந்தான் தானுவுக் கின்ன மோர்பேர். 4

யாவர்க்கு முதல்வ னெந்த னருமைமுன் னவனுன் னங்கம்
பூவுக்குட் படியு வொட்டாப் பூங்கழு வுருவங் கொண்டு
தாவித்தன் மூக்காற் கொத்தி சையிலத்தில் வந்து நின்றவ்
வாவிக்காக் கையைதந் தாண்டவா தியாங் கழுக்குன்றமே. 5

கிளவினர் விடையை யேற்று கெடிதலைந் செல்ல வேமன்
அளவிலா நந்தம் பொங்கி யமரர்க டுதிகக வீசன்
கிளர்விரி யயில ஞேடு கிரிவலம் வந்தவ் வுச்சி
வளர்விரி கோட்டம புக்க மார்கண்ட முனிபூ சித்தார். 6

புட்பகிரி மான்மியம்.

கலிநிலைத்துறை.

மார்கண்டர் வந்தகாதை வசனித்த னீட்செப் பேட்டின்
மேற்கண்ட கிரிக்கிப் புட்ப மேருவென்றோர் நாமத்தை
காற்கண்டு மொழிவன் கந்தக் கடவுளைப்பூ சித்தேற்று
மார்கண்ட குலத்தில் வந்த மறையவா கேண்மி யென்றே. (1)

வான நாட்டினில் வச்சிர வாட்படை வள்ளர்சபையிற்
கான விஞ்சையு ரியக்கர் கிம்புருடர் காந்தருவர்
கூனல் யழினர் வானவர் கோதில்பல் கேள்வியினிற்
போன சிந்தைய ரேனையர் முறைமுறை போற்றவே. 2

இருகு ரும்பைமென் முலைகளும் பூண்களு மிமைப்ப
பொருத டங்கணாள் புலோமிசை யொருபு டையிருப்ப
வருகு மேனகை திலோத்தமை யுருப்பசி யரம்பை
தேருவை மாதர்குற் றேவற்பன் முறைமுறை திருத்த. 3

சீர்க டந்தவ தரணி மண்டபத்துட் செழும்பொ
னோர்க டந்த சிங்கா சனத் திந்திர னிருக்கிற காலை
கார்க டந்தபூங் குழலெழிற் கரணிய ரிருவர்
வார்க டந்தபூண் முலையினர் சூழ்வர வந்தனரே. 4

ஆட லன்றரங் கெனுமவா ளனுமதி யொறறு
தோட லர்ந்த தார்மணங் கவர்ந்து சூழ்கண் பரப்பி
பாட லுஞ்சது விதங்களும் பரதத்தின் பண்புங்
கூட நின்றுகூத் தாடின முனிவருக் கொப்பமால். 5

போகி யென்பெயர் நிறுத்திடப் புரந்தரன் கானார்
மோக முள்ளூறுத் திடமன முகிழ்த்தனப் பொழுதிற்
றோகை மாந்தருந் துணைவிழிச் சுரும்பு தூதாக
வேகி டப்பணித் திதையமு மவனிடத் துய்த்தார். 6

ஆய காலையிற் புரந்தர னருகினி லழைத்து
சேய மாமணிப் பூணணி தூசணி செலுத்திநன்
வாயினான் மலர்க் கண்ணினாற் கையினான் மடமாத
ரேயு மாருள முணர்தரச் சூட்சியி னிசைத்தான். 7

சொற்ற சூள்வுவெள் விடைப்பிரான் றொல்புவி யதனி
லொற்றை நான்முகன் சென்னியைந் தொன்றினைக் கொய்திட
குற்ற சென்னியீ ரோடென வுடைந்துவி டலத்தைப் [லாங்
பற்றி வம்மினே னென்றனன் பணிந்து போயினரால். 8

விண்ண வின்னன நிகழ்த்திட விதிவழி யதனுன்
மண்ணி னித்தலத் தெம்பிரான் கோயின் வாட்கையிங் கிரியம
பண்ணு நன்மொழிப் பரத்தையர் பாற்றுணை வியரும்
மண்ணில் வந்துதித் தர்கடறை மகட்போலம் மின்னுர். 9

பாரு தித்திடு மிருவரும பருவங்க டோறுஞ்
சீரு தித்திடத் திருவங்க ளுதித்திடச் சிறந்தே
யேரு தித்திடுஞ் சிறுநல்லார் பெருநல்லா ரென்னும்
பேரு தித்திடு மிருவரும் பிறையென வளர்ந்தார். 10

பூங்கழங்குபந் தம்மனை யூசல் பூவையரோ
டாங்க மர்ந்துபல முறைவிளை யாடிய பின்னர்
பாங்க மைந்தநங் குலத்தினுக் கொற்றவாம் பரதந்
தீங்குரா வகையா சிரியனுற செயன்முழு துணர்ந்தார். 11

கலிவிருத்தம்.

வண்டமிழு மாரியமு மாறில்பல நூலும்
கொண்டிசைக ளேபயிலவு கொண்டுமுறை பாடி
தண்டரள மாலைதவ ளத்தொடையல் சூடி
அண்டர்புகழ் வாணிநிக ராமென வளர்ந்தார். 12

மங்கல வளம்பல மகிழ்ந்துதின மேவிப்
பொங்குநறு மாமணி புலன்கல னணிந்தே
குங்கும நரந்தைமுலை கொட்டியெழின் மீறிச்
செங்கமல பீடிகை சிறந்ததிரு வொத்தார். 13

மந்தர முதற்பிறவு வந்தமணி வீணை
தந்திர நரம்பு தடவந் திசைபயின்று
சிந்தைபுரி மாதவர்கட் செஞ்செவி கவர்ந்து
கந்தருவ மங்கையர் கவின்கொடு வளர்ந்தார். 14

பாரினுள போக முழுதும் பரிவினுய்ந்து
வேரிமலர செம்பொனின் விளங்கிட மிலைந்து
தோரிய மடந்தையர்கட் சூழ்நடன மாடி
யாரவிள முரலயி ராணிநிக ராணுர், 15

மாமதன வேள்வியின் மனம்புகிடா தார்ந்து
நாமமுறு காமகலை நாடொறு நவின்று
தூமமல ரோதியர் தொழும்படியிருந்து
காமர்தழி யாலிரதி கட்டழகை யொத்தார். 16

கெண்டைவிழி காதொடு கிடந்துலவி மீளக
கொண்டழக வண்டு குமிறிக்கு முறியாடத
தண்டைகட் சிலமபுகள் சலசல வெனததான்
பண்டைமுறை போல்நடன மாடுவ பயின்றா. 17

பன்னலிசை யான்முனிவர் பண்பினை முடிப்பா
ரின்னகையி னுலக மேழினையும விாப்பா
ரன்னநடை யாலமர்ந் தயன்றனை யழைப்பார்
வன்னமுலை யான்மதன் முடிககவினை மாய்ப்பார். 18

15-பா-3- அடியிற் தோல் இயலென்னும் பாலை-தோரிய-வென்பது.)

ஆடவட் களிற்சிறப் பமைந்த சுமங்கல்யப்
பீடுகொள்கை சூளையர் பிறப்பினி லுதித்து
நாடுவிதியின் பயனையார் நவில வல்லா
ராடவர் தமக்குமணி யல்குல் விலைகூறுர். 19

இத்திரமி னூர்பூமி னிருந்துவளர் நாளிற
சித்தமகிழ்ந் தாயரொடு சேடியர்கள் கூடி
யததாதிரு முன்பி லரங்கேற்ற வென நாடி
மெத்தவமின் னுரைமணி வீதிகொடு புக்கார. 20

கன்னியர்கட் கட்களெதிா கண்டுளைகட் சூழ
மின்னுலவு சாயலுது கண்டுமயின் மேவ
அன்னநடை கண்டுமிக நாணி யயலபோக
மென்னடை யபயின்றுமெல்ல மெலலென நடந்தா. 21

பேரழகு கண்டுசிலர் பெதுறல்கொள வாரு
மாரமுலை கண்டுசில ரங்ஙனயர் வாருமு
பேராவழி கண்டுசிலா போற்றி மெலிவாரு
மூரலெதிர் கண்டுசிலர் மோகமுறு வாருமு. 22

நில்லுநில்லு மென்று சிலர் நெஞ்சநெகிழ் வாரும்
புல்லுமெமை யேவிலை புரிந்திடு மென்பாரும்
நல்லநல்ல ரோரென நவின்றிடு மென்பாரும்
மில்லையிடை யோசிறு திருந்திடு மென்பாரும். 23

ஆடவரிவ் வாறுபுடை யஞ்சலி திருத்தப்
பாடக மணிந்த பதநோவ நடைகொண்டே
யேடுதிகழ் கொன்றையர்தொண் டீசருறை கோவில்
நாடக நவின்றிட நலங்கொடு புகுந்தார். 24

அறுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சென்று நடனம் புரிபசும்பொற் செழுமா
மணிமண் டபமேவி
கன்று மதிமான் புனைந்தவர்தொண் டீசர்
கழற்சே வடிபோற்றி
நின்று தமியேன் றமையாண்டு கொள்வா
யென்று நெகிழ்ந்துருகி
நன்று புரிநா டகநவில நறைமா
மலர்தூய் வணங்கி நின்றே. 25

ஆடற் கேற்ற பல்வியக்க மார்ப்பச்
சதுமா மறைநெறியிற்
பாடற் கேற்ற குழலிசையாழ் பயின்றே
யிசையின் பண்ணெழுப்பக்
கோடற் கேற்ற கைத்தலத்தின் விதமுங்
கூத்தின் குணமும்விழி
நாடற் கேற்ற வவையகத்தி நலமுநயப்ப
நடிக்குங் காலே. 26

அம்பு ராசி சூழுவனி யரசர்
நெருங்கும் வையகத்தே
கொம்ப ரனார்கூத் தவிநயத்தின் கொப்புக்
கேற்ற மண்டபமீ

தேம்பி ரான்மண் டபமெனுமீ தென்னுங்
காணு வாயிரக்கா
லும்பர்கோவந் துறைந்திடுமண் டபமும்
வேணு மெனவுரைத்தார். 27

மொழியு மாறறந் துணையுநல்லார்
செவியிற் புகலு முதுணர்வின்
வழியு மகவான் மொழிந்ததுவு
மனதி லுதிப்பமறைத் ததனை
யொழுகி நின்று சன்னதிப்பே
றளிப்ப வாங்கி யுடையானைத்
தொழுது நினைத்த வரமெமக்குத்
தருதி யென்னத் துணிந்துரைத்தார் 28

விடைகொண் டவையி லொருவரையு
நோக்கா தகன்று மின்னனயார்
புடைகொண் டேத்த வினவிடத்திற்
போகிப் போகிப் புணர்ப்பையெண்ணி
படைகொண் டிடுகண் படைகொள்ளா
திருக்கும் பருவந் தனிற்பொன்னந்
தொடைகொண் டெழுந் திந்திரன்
றெண் டீசர்பாதந் தொழவுவந்தார் 29

வந்து வழிபா டாற்றியருள் வளங்க
ளிருவர் மனைமேவி
முந்த நிகழ்ந்த வாறவர்க்கு
மொழிந்து மகிழ்ந்து மானிடர்போற்
சிந்தை புரிந்து கலவி யின்பஞ்
செலுத்திச் சிலநாட் செல்வதனை
யிந்த ஞாலத் தாடவர்க ளறியார்
பிறிதொன் றிசைக்கலுற்றார். 30

தந்தம் மனையுட் டிரவியங்க ளெல்லாந்
தாமே கொடுசென்று

பந்த முறுங்கா மப்பிணிநோய் பகர்ந்து
குறைபா டுரைத்திடினும்
நிந்தை மொழிந்து நீவிரிது நிகழ்த்தா
தொழியு மெனவெறுத்தே
இந்த நெறியி லொழுகிடுநகா லிளைஞர்
மயல்கொண் டிகழ்வு கோண்டே. 31

ஒருசேரரத் திசைமுழுது மொருகோ
லோச்சி யுலகாளும்
பொருநன் கிள்ளி வளவனுளம் பொலித
லயர்வுற் றிருதுரைப்ப
வருதற் பயனை யறியாம லவரை
யழைத்து வம்மினென
பொருவித் தூத ரரசனுமை விளித்தார்
பொதுமி னெனப்புகன்றார். 32

அரசர் விளிக்கு நிமித்தமவர்
தமக்குமெமக்கு மியாதென்ன
வுரைசெய் துரவுத் தோழனை
ரும்முடன் யான்வருவ தில்லையென
விரைவின் முனிந்து விளம்புதலும்
வெறுவி யுளையா மீண்டிறைவ
பரவி யுரைப்ப மனந்தெரிந்து
வாளாதிருந்தான் படிபூப்பான். 33

சிலநா ளிங்ஙனிகழகாலத் தொருநாட்
சினவெள் விடையோன்செம்
பொலனார் கோயி லிற்புகுந்து
பண்டொப்பணிகட் புரிந்திடுவோன்
கலனார் முலையார் சார்ந்தாற்றி வீசக்
கவரி கால்சாய்த்து
பலகால் வீணை விரலுளர்ந்து பாடற்
பயிலுங் காலத்தினின்னே. 34

பெருமான் பெருந்த கிள்ளியுமெம் பெருமான்
மணிப்பொற் கோவிலெய்தி
மருமா மலர்கொண் டருச்சித்து வழுத்தி
வாயற் பிறம்வருங்கா
லிருமா தருந்தம் பணிமுற்றி யிறைஞ்சி
யரச னுறைகின்ற
திருவா யலின்வந் திடுபோழ்திற் சிலர்தா
மிறைவற குரைசெய்வார். 35

ஐய நினது மொழிதிறபப
லகவன் மாத ரிவரே யன்னத்
தையலீர் நீவம மினெனச்
சாற்று மிறைவ னருகுசெல்கால
நெய்யுண் கதிர்வேல் விழிமடவீர்
நீவி ரியாவ ரெனவினவ
வையம பிறப்பீறு தேவடிமை
மரபி லுத்த மாதரென்றார். 36

பொதுமா மகளீ ரெனில் நீவிர் புரணப்
பொருந்தி னோர்பொருட் கொண்
டிதுபோ தனேயே யென்பதேவ
னென்றார்க் கருநீர் ஞாலத்தி
லுதியா நிற்போர் தமைப்புணர்வோ
மெனவேற் கிறைவ னுளநகையா
மதுவார் குழலீர் புணர்குறியுண் டதுநீா
மறைத்தீ ரெனவுரைத்தான். 37

சொற்ற மாற்ற மதுகேளாத்
தோகைமார் புன்னகை முகிழ
வுற்ற துரைத்தீர் மானிடரை யுவந்து
புணரோம் புரந்தையில்வாழ்
வெற்றி யுடையோன் றிருவருளால
விண்ணுட் டரசையாம் புணர்வோம்

பெற்ற பெரும்பே றாற்பகர்ந்த வாய்மை
பிறழா தெனமொழிந்தார். 38

ஆய்மி னூரே கற்பகநாட் டயிராவதப்
பாகனைக் கொண்டிப்
பேயமனை பூமாரி செம்பொன் மாரி
பொழிவித்த லல்ல நல்ல
வாய்மை யுடையீர் கற்புடையீர்
மழவெள் விடையோ னடிமையுநீ
தூய்மை யுடையீ ரேமாரி சொரிவிப்
போமென் றுரைத்துச் சென்றார். 39

அந்த ஞான்றி விருவரை யாமத்தி
லயிரா வதக்கோமான்
வந்து நல்லாரைப் புணர்கான் பாற்ற
முரைப்பத் தொடுத்தகல
முந்து முடிச்சி கரவரை முழுது
மந்த நாடனத்துஞ்
சிந்து நறும்பூ மாரி செம்பொன்
மாரிபொழிந் தவந்தனவால். 40

பெய்யுந் தொறுங்கண் டதிசயமே பெரிதும்
விளைத்தார் நல்லார்முன்
செய்யுந் தவங்கற் பினைபோற்றி திருந்தத்
துதித்தார் புரைந்தையுள்ளார்
அய்யன் கருணை தனைத் தொழுதே
சிலநாளிருந் தாரிமை மடவார்
வய்யந் தணத்த ரந்தணராயம் பொன்னு
டனத்து மகிழ்சிறந்தார். 41

அன்று டதனைப் பூந்துறைநா டென்று
மன்னுட் டுறைப்பதிக்கு

நன்று மந்தான் பூந்துறையூ ரென்னு
மன்னகரில் வாழமலன்
றன்று மந்திரு முகமலர்ந்த தாங்தோ
ணீசன் றடஞ்சிகரப்
பொன்றார் கிரிக்கிப் புட்பகிரி யென்னும்
போற்றப் பொலிந்தனவாம். 42

தாதார் முளரி மருமசர வணமா
முனிவா தடம்பொழிற்பைம்
போதார் சிகர கிரிபுட்ப கிரியா
னதுவும் புகன்றனமேல்
வேதா விறைஞ்சுங் கதிரிலைச்செலு வேலோ
னிடும்பன் றனக்கு வழி
யீதா மெனக்காட் டியசீர்தா மெடுத்து
மொழிது கேட்குதியால். 43

இடும்பனுக்கு வழிகாட்டிய மான்மியம்.

கலிவிருத்தம்.

மலைய மாமுனி வழிபா டுஞற்ற
வலையார் சிவகிரி சத்தி யங்கிரி
நிலைபெறக் கொணர்து மென்ன நீங்குபு
தலைமை திரிகூட சலத்தினில் வந்தான். 1

சூரன் முதலி யோர்க்குத் தொல்படை
யாரணி யார்த்திடும் பாசு ரன்றிறல்
வீரர்சேய் வேலினல் வீழ்ந்த காலையிற்
றூரமோ டகன்று வந்தன் சயிலத்தே. 2

மறைவொடு வந்தவன் முனிவன் வந்துழி
யறைக ழற்றொடுத் தடுத்த வாரெலாமல்
குறைவரக் கூறலுங் கும்ப மாமுனி
திறலிதொய் வெருவலன் றபயஞ் சேர்த்தியே, 3

இந்துசூழ் கைலையெம் மிறைவன் றந்திடக்
கந்தமால் வரையினிற் கவினி யோங்கியே
எந்தையெம் மிறைவி நாமங்க ளெய்திய
மைந்துறு சிருங்கமோ திரண்டும் வாங்கியே. 4

ஏறிற் கேதார வீசான திக்கினில்
மாறுதிர் பூர்ச்ச மாவனத்தில் வைகுங்
கூறரு மவ்விரு குவடு கொண்டு நீ
யாறுக ணீந்தீண் டடர்தி யென்றரோ. 5

யோகுரு மந்திர வலிக ளுத்திநீ
போகெனப் போற்றிப் பொருப்பை விட்டொரீஇ
வேகமுற் றதிர லவிழ்த்துக் காசியி
லேகி யயனம் மிறைவனைப் போற்றி. 6

எந்தை கேதார வீசானத் தெய்தியே
பைந்த மிழ்முனி பகர்வ னத்தினி
லந்த மாமுடி யரிச்சித் தம்முனி
தந்த மந்துண்டு கொடு சமர்த்தனோர். 7

பிறை யெயிற் றுக்கரும் பிரமதண்டத
திறையன் மாவுறி யேனப் பிணைத்தரோ
வுறையு மவ்வரை யுத்தெ டுத்தனன்
குறையி லாவலியொடு கொண்டு போர்ந்து. 8

காசியி னோங்கிய கங்கையை நீந்தி
மாசறு விந்த மலைப்புற நீங்கி
யாசறு சீர்மல்லி யார்ச்சன மேவி
வீசிய தென்கையி லாயம் விடுத்தே. 9

அன்பினர் சூழரு ளசல நேர்ந்து
மின்பொலி நன்முதுக் குன்றினை மேவி
யின்புறு காவிரி யாறு கடந்து
பொன்பொல புட்ப கிரிப்புற நுற்றுன். 10

ஆறதர் கண்டில னஞ்சின னெஞ்ச
மேறின னவ்வரை மீதி லெடுத்த
கூறிரு வெற்பொடு கொட்புற நின்றே
தேறுத லேது மிலாது திகைத்தான். 11

ஆயிடை மேவிய வள்ளிலை வைவேற்
சேயொளி ராதவர் சென்னிற மன்னர்
பாயொழு கன்மெய் படைத்த வனப்புத்
தூயவெண் மூறல துலங்கு செவ்வாயும். 12

செச்சை கமழ்ந்து சிறந்துயர் தோளுங்
கசசைசயில் வாளொடு கட்டு மருங்கும்
பிச்சி நறுந்தொடை பெய்சிகை வாய்ப்பும்
வச்சிர மாலை வயங்குபொன் மார்பும 13

தொட்டிடு தோற் கழற் சூழிருதாளு
மட்டவிழ் செங்கையில் வாளியும விலலுங்
கட்டெழின் மீறிய காவல வன்போற்
கிட்டின னைகை கிடைத் தெதிர் நின்றான். 14

எய்திய போழுதி லிடும்ப னெதிர்ந்தே
மைதவி மேனியன் வண்டமர் தாரோன்
செய்தவ மோருரு வங்கொடு சேர்ந்தே
யுய்தவர் வந்திவ னுற்றது வேயோ. 15

ஒண்டொடி பாலுமை யும்பெரு மானே
வண்டுள வம்புனை மாயவ னேயோ
பண்டய பூமி படைத்தவ னேயோ
வண்டர்கள் சூழயி ராவத னேயோ. 16

கன்னலு மைங்கணை யுங்கை சிறந்த
மன்மத னிவ்வழி வந்தன னேயோ
பன்னிரு செங்கை படைத்தசெவ் வேற்சே
யென்னையு மாட்கொள வெய்தன னேயோ. 17

அன்றியு மோர்குடை நீழ லனைத்தும்
வென்றிகொள் காவல வேந்திவ னேயோ
வன்றிற லம்புவில் வாட்கையி லேந்தி
நின்றவன் யாரென நேச நினைந்தே. 18

அறுசீர்கழி நெடிலாசிறிய விருத்தம்.

ஆரைநீ யீண்டு வந்த காரண மென்னை யன்றே
பாரி லோர் செங்கோ லோச்சிப் பனிமதிக் கவிகைநீழ
லாருயி ரனைத்துங் காக்கு மரசரோ யேரென் றுரைதை
வேரியந் தாரோ யீங்கு வேட்டைமேல் வந்த னென்றார். 19

நீயசு ரேசன் போல நின்றனை வரைக ளேந்தி
சேயிடை பரந்து மீண்டு திரும்பினை போலு மாண்டைக்
காயிறு சிந்தை வைத்தீண்ட டைந்தனை வரையினின்மீ
தேயுகா ரணமே தென்னும் வேலவர்க் குரைக்க லுற்றான். 20

மன்னவன் குரவன் கும்ப மாமுனி வரையி ரண்டுந்
தன்னுழி கொணர்தி யென்று சாற்றிய பணிமேற் கொண்டு
சொன்னவா ரடைந்து பூர்ச்சவனங்குறீச் சிறும்பி ரண்டு
மென்னிரு புயத்திற்றாங்கி வருமிடத் திடையூ றுற்றேன். 21

அருண்முனி சொற்ற வாறு பிழைத்துவந் தடைந்தேன் விந்த
மருவிய வதர்கொண் டீண்டு வந்துழி மருண்டு நெஞ்ச
மிருண்மிடைந் தலம்வந் திந்த வரைமிசை யேறுங் காலை
நிருபநிற் கண்டே னேகும் நெறியினை நிகழ்த்து கென்றான். 22

தானவ நீமுன் னுற்றுந் தவப்பய னவனி வந்தாய்
வானவர் போற்றுஞ் சென்னி மாமலை யாயி யும்பைந்
தேனிமிர் பொழிற்சூழ் புட்ப கிரியெனுஞ் சிறந்த பேரு
மானதிவ் வரையீண் டென்று மறுமுகக் கடவுள் வைகும். 23

சொல்வழி முனிவன் முன்னஞ் சொற்றவ வழியி லீது
நல்வழி நடந்து சென்று நருமுனி வார்க வெற்பிற்
செல்வழி யருவிச் சாரல் வடதிசை வைகிச் சேரிப்
பல்வழிக் கவலை தீர்தி படருதி மலையுந் தென்றான். 24

எந்தைசொன் மாற்றங் கேளா வினையத்து ளுவகை பூத்து
முந்துறு கவலை தீர்ந்து முதலவ னிச்சை யேற்று
நந்தவில் வழிநா டாயா வினன்குடி நணுகுங் காலை
சுந்தர வரையி ரண்டுஞ் சுமந்த தோள்வலி தொலைத்தே. 25

நிலந்தனில் வைத்துப் போந்த நெரியிழுப் பாறி மேவி
யுலம்பெறு தோளான்மீள வுபயவெற் பெடுக்கும் போதிற்
பிலங்குறைந் துளங்க னன்று பேதுறலுற் றுள்ளோர்ப் புற்ற
சலந்தணப் பெய்தி யண்ண லசலத்தைச் சாரு மெல்லை. 26

ஒருபெருங் குரவ னீள மொன்கையி னெடுத்த கோலு
மருவுதான் மார்பும் பின்னுற் குஞ்சியு மருங்கு சாத்தும்
பொருவில கோவணமுந் தண்டை புனைந்த சீரடியுந் தோன்றக்
குருமணி வேற்சேய் நின்ற குளந்தையம் பருவங் கண்டான். 27

காண்டலு முருகி மீட்டு கன்னெறல் வினையி னீட்டம்
பூண்டவா றழன்று பொங்கிப் பொருந்திநீ யார்கா ணென்று
